**சனி | ஆனி 1** 📖 மாலை வாசகம் - 2 கொரி 11:3

# நன்மையான தோன்றுபவைகள்

ஒரு ஊரிலே இயங்கி வந்த சனசமூக நிலையத்திலே இருந்த அங்கத்தவர்கள் யாவரும், ஐக்கியத்துடனும், கருத்துடனும், ஊர் மக்களின் சேம நலனுக்கா உழைத்து வந்தார்கள். சில ஆண்டுகள் சென்றதும், தூர தேசத்திலிருந்து அந்த ஊருக்கு வந்த மனிதனனொருவன், உடையிலும், நடையிலும், பேச்சிலும் பண்புள்ளவளாகவும், கற்றவனாகவும், யோக்கமுள்ளவனாக காண்பித்துக் கொண்டான். அந்த ஊரிலுள்ள சில குடும்பங்களை அணுகி, நீங்கள் பிள்ளைகளை வெளியூருக்கு அனுப்புவதற்குரிய வாய் ப்பு உண்டு, ஆனால் உங்கள் முற்பணமாக ஒரு சிறிய தொகையை தர வேண்டும் என்று பத்திற்கு மேற்பட்ட குடும்பதினரிடம், பணத்தை பெற்றுக் கொண்டார். அந்த ஊரின் சனசமூக நிலைய தலைவர், மக்களை நோக்கி, இப்படியாக ஊரறியாதவர்களுடன் ஒப்பந்தம் செய்து, பணத்தை விரயமாக்குகின்றீர்களே என்று அவர்களை கடிந்து கொண்டார். ஊர் மக்களில் சிலரோ, சனசமூக நிலையத்தின் தலைவரோடு கோபம் கொண்டு, அவரை நோக்கி: ஊருக்கு நன்மை செய்ய ஏற்படுத்தப்பட்ட நீங்கள், ஊரைத் தேடி வந்த பெரும் நன்மையை குழப்பப் பார்க்கின்றீர்களே என்று கூறி அவரைவிட்டு பிரிந்து போனார்கள். சில மாதங்கள் சென்ற பின்பு, வெளியூரிலிருந்து அந்த ஊருக்கு வந்த மனிதனானவன், ஏமாற்றுக்கா ரன் என்பதை அறிந்து, தாங்கள் இவ்வளவு சீக்கிமாய் வஞ்சிக்கப்பட்டு போனோம் என்று கவலையும், கோபமும் அடைந்தார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, வஞ்சிக்கப்பட்டு போவதைக் குறித்து பரிசுத்த வேதாகமத்திலே பல எச்சரிப்புக்கள் கொடுக்கப்பட்டிருப்பதை காணாலாம். ஆதியிலே ஏதேன் தோட்டத்திலே நடந்த வஞ்சகத்தைப் போலவே, வஞ்சகமானது பல வடிவங்களிலே விசுவாசிகளை நோக்கி வருகின்றது. சில வேளைகளிலே, தங்கள் ஜெபத்திற்கு பதில் கிடைத்தது என்று சில விசுவாசிகள், காரியங்களை வேத வசனத்தின்படி ஆராய்ந்து அறியாமல், அந்நியர்களின் வஞ்சக வலைக்குள் அகப்பட்டு விடுகின்றார்கள். இதனால் தாங்களே தங்கள் வாழ்விலே வேண்டப்படாத பாதகமான பின் விளைவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே, தேவ ஆலோசனைகளை தள்ளிப் போடாதிருங்கள். வேத வார்த்தைகளின் வெளிச் சத்திலே, காரியங்களை ஆராய்ந்து நிதானித்து அறிந்து கொள்ளுங்கள். ஜெபத்திலே தரித்திருந்து தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

**நீதிமொழிகள் 19:20**

ஆலோசனையைக்கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்.

**ஜெபம்:** வழிநடத்தும் நல்ல தேவனே, மாம்ச கண்களுக்கு நன் மையாக தோன்றும் காரியங்களிலே நான் இழுப்புண்டு போகாதபடிக்கு, வேத வார்த்தைளின் வெளிச்சத்திலே காரியங்ளை ஆராய்ந்து அறிந்து கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "ஒரு மணிநேரப் பேச்சு"

ஒரு ஊரிலே நடந்த உற்பத்திப் பொருட்களின் கருத்தரங்கொன்றிலே, ஒரு மணி நேரம் உரையாற்றிய மனிதனொருவன், அந்த ஊரிலுள்ள மூப்பர்கள், அதிகாரிகள் மத்தியிலே பேசும் போது, அவர்களை நோக்கி: "நான் விற்பனையாளராக உங்களிடத்தில் வரவில்லை. ஆனால் இந்த உற்பத்திப் பொருளின் பாவனையாளராக உங்கள் நடுவே வந்திருக்கின்றேன்" என்று வருகை தந்திருந்தவர்களின் உணர்வுகளை தூண்டும் வகையிலே, அடுக்கு மொழியிலே குறிப்பிட்ட உற்பத்திப் பொருள் ஒன்றைக் குறித்து உரையாற்றினான். சில கிழமைகள் கடந்து சென்றதும், அந்த ஊருக்கு உரையாற்ற வந்த மனிதனானவன், அந்த உற்பத்திப் பொருளின் இரகசிய முகவர் என்றும், அதை சந்தைப் படுத்துவதினால், கணிசமான தொகைப் பணத்தை முகவர் சேவைக் கட்டணமாக (Agent's commis-sion) பெற்றுக் கொள்கின்றான் என்பதை அறிந்து கொண்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, "கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இன்று இணையத்தளத்தின் வழியாக போதனைகள் மலிந்து போய் இருக்கின்றது. எனவே நீங்கள் அறியாத போதனைகளை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். எப்படி நாம் எச்சரிக்கையாக இருக்க முடியம்? "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது." எனவே ஒருவரின் ஒரு மணிநேர பேச்சிலும், அவர் தன்னைக் குறித்து தானே கூறும் அனுபவ சாட்சிகளில் முற்றாக மயங்கி, உங்கள் வாழ்விலே முக்கிய தீர்மானங்களை எடுத்தக் கொள்ளாமலும், கற்றுக் கொண்டவைகளை விட்டு விலகாமலும், அவருடைய பேச்சுக்களை வேத வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்ப்பதுடன், அறியாத அந்நிய பேச்சாளரிகளின் வாழ்க்கையின் அனுபவ சாட்சிகளை அவர்களை நன்கு அறிந்தவர்கள் வழியாக உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்குள் வாசம் செய்யம் தூய ஆவியானவர் உங்களை வழிநடத்தி செல்வாராக.

**மத்தேயு 7:17**

அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.

**ஜெபம்:** என்னை நித்திய வாழ்விற்கு அழைத்த தேவனே, மனிதர்களின் பேச்சிலே நான் இழுப்புண்டு போகாதபடிக்கு, உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரபல்யமானவைகள்

ஒரு மனிதனானவன், மிக முக்கியமான கூட்டமொன்றிலே கலந்து கொள்வதற்காக, அடுத்த ஊருக்கு பயணம் செய்து கொண்டிருந்தான். போகும் வழியிலே, குறிப்பிட்ட ஓர் இடத்தில், வழமைக்கு மாறாக ஜனக்கூட்டம் திராளாக சேர்ந்திருப்பதை கண்ட மனிதனாவன், ஜனங்கள் இவ்வளவு அதிகமாக கூடியிருக்கின்றார்களே, நான் சென்று சங்கதி என்னவென்று பார்த்து வருவேன் என்று கூறி வாகனத்தை தெருவருகே நிறுத்திவிட்டு, சன நெருகலுக்குள் நுழைந்து சென்று என்ன நடக்கின்றது என்று பார்த்தான். அங்கே சில மனிதர்கள், ஆடிப்பாடி சில வித்தைகளை காண்பித்து கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட அந்த மனிதனானவன், இதற்காக இப்படி கூட்டம் கூடியிருக்கின்றார்களே என்று தனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு, தன் வாகனத்தை நோக்கி சென்றான். ஆனால், அவன் வாகனத்தை நிறுத்தி அங்கே சென்ற போது, அவன் பின்னே வந்தவர்களும், காரணமென்னவென்றறியாமல் தங்கள் வாகனங்களையும் நிறுத்திவிட்டு ஜனக் கூட்டத்திற்குள் சென்றிருந்தார்கள். அதனால், அந்த மனிதனானவன், தன் வாகனத்தை எடுக்க முடியாமல், சில மணிநேரம் அங்கேயே காத்திருந்தான். அதனால், அவன் செல்ல வேண்டிய முக்கிய கூட்டத்தில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது. பிரியமான சகோதர சகோதரிகளே, ஜனங்கள் கூட்டங்கள் இன்ற எங்கே கூடுகின்றார்கள்? எடுத்துக் காட்டாக, ஊடகங்கள் வழியாக வரும் ஒரு காணொளியை அநேக இரசிகர்கள் பின்பற்றி, தங்கள் விருப்பத்தை தெரிவிக்கின்றார்கள், காரணம் ஏதும் இல்லாமல், மற்றவர்களும் அதை பின்பற்ற விரும்புகின்றார்கள். இவ்வண்ணமாகவே, தேவ காரியங்களையும் இன்று பின்பற்றுவோர் தொகையை வைத்து கணிப்பீடு செய்து, அறியாத காரியங்களுக்குள் நுழைந்து, தாங்கள் பெற்றுக் கொண்டதும், தாங்கள் செய்ய வேண்டிதுமான முக்கிய காரியங்களை மறந்து போய்விடுகின்றார்கள். இதனால், சில விசுவாசிகளும் வழிவிலகி வஞ்சிக்கப்பட்டு போய்விடுகின்றார்கள். ஒரு காரியத்தை அநேகர் பின்பற்றுவதால், அது நலமானதாக இருக்கும் என்று இந்த உலகத்தின் அளவுகோலின்படி கணிப்பீடு செய்யாமல், எல்லாவற்றைம் சோதித்துப் பாருங்கள். சுயபுத்தியிலே சாயாமல், தேவ வார்த்தையின் வெளிச்சத்திர் எல்லாவற்றையும் சோதித்தறிந்து, வேதம் கூறும் நலமானவைகளை மாத்திரம் பின்பற்றுங்கள்.

**1 தெச 5:21**

**எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, மனிதர்களுக்கு செம்மையாக தோன்றும் வழியிலே நான் செல்ல என் இருதயத்தை சாயாமல், உம்முடைய வார்த்தையின் வெளிசத்திலே நடக்க எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வஞ்சிக்கும் தந்திரங்கள்

ஒரு ஊரிலே உத்தமனாக வாழ்ந்து வந்த மனிதனானவனொருவனை, குற்றத்தில் அகப்பபடுத்த வேண்டும் என்று அந்த ஊரிலிருந்த அவன் எதிரியானவனொருவன் தீர்மானம் செய்து கொண்டான். அவனை சட்டரீதியான குற்றத்தில் அகப்படுத்துப்படி, தன்னுடைய நண்பனொரு வனை நலன் விரும்பியை போல, அவன் வாழும் தெருவிற்கு அனுப்பி, துரிதமாக பணத்தை சம்பாதிக்க சில வழிகளை குறித்து ஆலோசனை வழங்கினான். ஆனால் அந்த யுத்தி பலனளிக்கவில்லை. பின்னர், துஷ்ட ர்களை கொண்டு அவனை பயமு று த்தும்படி மிரட்டல்களை விடுத் தான். சில வன்செயல்களை செய்வித்தான் அவைகளை கண்டும் அந்த உத் தமனாக வாழ்ந்த மனிதனான வன் அசந்து போகவில்லை. எனவே, அவ னோடு நீண்டகாலமாக நல்ல நண்பனாக இருந்த வேறொருவனை, அழைத்து, அவனுக்கு அதிக பணத் தை கொடுத்து, அந்த உத்தமனா னனோடு நட்பாக நடந்து, அவனை குற் றத்தில் மாட்டிக் கொள்ளுக் படிக்கு, வஞ்சகமாக யுக்திகளை நடப்பித் தான். தன் நண்பன் தனக்கு துரோகம் செய்யமாட்டான் என்று அவனை நம்பியிருந்த உத்தமனா னவன், அந்த நண்பனினாலே வஞ்சிக்கப்பட்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்திலே வாழும் வரையும் நமக்கு போரட்ட ங்கள் உண்டு என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இன்றைய உலகிலே போரட்டங்கள் என்று கூறும் போது, மனிதர்கள் ஆர்பாட்டங்க ளையும், ஊர்வலங்களையும், கலவரங்களையும், சண்டைகளையும் குறி த்து சிந்தித்துக் கொள்கின்றார்கள். நமக்கு வரும் போரட்டங்கள் அப்படி ப்பட்டவைகளல்ல, அவ்வண்ணமாக நாம் மாம்சத்திலே போராடுகி ன்ற வர்களுமல்ல. மேற்கூறப்பட்ட சம்பவத்திலுள்ளது போல, ஆவிக்குரிய போராட்டங்கள், நமக்கு பல வழிகளிலே வருகின்றது. அவற்றில் ஒரு சிலவற்றை நாம் பார்க்கும் போதே அவை தீமை என்பதை உடனடியாக இனம் கண்டு கொள்கின்றோம். ஆனால், நம்முடைய கண்களுக்கு செம் மையாக தோன்றும் வழிகள் பல உண்டு. நாம் அவற்றை உள்வாங்கும் வரை நமக்கு நன்மையானவைகளைப் போல காட்சிளிக்கும். அதன் பின் னர், அதனால் உண்டாகும் விளைவுகளோ பாதகமானவைகளாக இருக் கும். எனவே, தேவனுடைய வார்த்தைகள் சமரசம் செய்யமலும், சூழ்நி லைகளுக்கு ஏற்றபடி மாற்றாமலும், அந்த வார்த்தைகளின் வெளிச்சத் திலே நடக்க உங்களை பழக்கிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 91:3**

**அவர் உன்னை வேடனு டைய கண்ணிக்கும், பாழா க்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.**

**ஜெபம்:** மனிதர்களுடைய மனதின் யோசனைகளை அறிந்த தேவனே, வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமாவை கண்ணிகளுக்கு நீர் தப்புவித்து காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்கள்

ஏன் இத்தனை தொல்லைகள்? ஏன் இத்தனை கஷ்டங்கள்? என்று கூறி, தாங்கள் வாழும் பிரதேசங்களையும், உறவுகளையும், நண்பர்களையும், தொழித்துறைகளையும் மனிதர்கள் மாற்றிக் கொள்கின்றார்கள். ஏன் அப்படி செய்கின்றார்கள்? ஏதோ ஒரு வகையில் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தவிர்த்து கொள்ளலாம் என்று எதிர்பார்கின்றார்கள். அப்படியாக தங்கள் வாழ்வில் மாற்றங்களை உண்டு பண்ணுவதால், மனிதர்கள் சில பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்கின்றார்கள். ஆனால், அவை நீண்ட நாட்களுக்கு நீடித்திருப்பதில்லை. சீக்கிரமாக, புதிய இடத்திலே, புதிய உறவுகளிலே, புதிய நண்பர், தொழித்துறைகள் வழியாக புதிய பிரச்சனைகள், புதிய வடிவமைப்பிலே மனிதர்களை பின்தொடர ஆரம்பித்து விடுகின்றது. இந்த உலகத்திலே மனிதர்களுக்கு வரும் நோய்களுக்கு, மருத்துவர்கள் புதிய புதிய மருந்துகளை கண்டு பிடிக்கின்றார்கள். அந்த மருந்துகளினாலே நோயாளிகளுக்கு பிரயோஜனங்கள் உண்டு என்பதை எவரும் மறு தலிப்பதில்லை. ஆனால், பின்விளைவுகள் இல்லாத மருந்துகள் இந்த உலகத்திலே இல்லை. குறிப்பிட்ட நோயை நீக்க எடுக்கும் முயற்சிகள், வேறு சில நோய்களை உண்டு பண்ணிவிடுகின்றது. முன்பு எனக்கிருந்த நோயையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது, தற்போது எனக்கிருக்கும் பின்விளைவுகள் முன்பு எனக்கிருந்த நோயைவிட பரவாயில்லை என்று மனிதர்கள் மனதிருப்தியடைந்து கொள்கின்றார்கள். மனிதர்கள் உயிர் வாழும்வரை இந்த வாழ்க்கை வட்டத்திற்கு முடிவில்லை. அது போலவே, வாழ்க்கயைில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு மனிதர்களால் உண்டான தீர்வுகளால் வரும் பலன் அற்பமே. மனித அறிவினாலே எடுக்கப்படும் தீர்மானங்கள், நன்மையாக தோன்றினாலும், பின்விளைகள் இல்லாமற் போவதில்லை. ஏவாளானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று விலக்கப்பட்ட கனிகளை புசித்ததால், நித்திய மரணமானது பின்விளைவாகிற்று. என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று ஆண்டவர் இயேசுதாமே இளைத்து போனவர்களை அழைக்கின்றார். அவரிடத்தில் உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுங்கள்.

**மத்தேயு 11:28**

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, நீர் என்னை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்ளும்படிக்கு உம்மையே உறுதியாய்ப் மனதாரப் பற்றிக் கொண்டு, உம்மையே நம்பியிருக்கிக்கும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முடிவு பரியந்தம் நிலைத்திருங்கள்

ஒரு விசுவாசியானவன், நன்மையான காரியங்களை உடன் சகோதர சகோதரிகளுக்கும், அயலவருக்கும் செய்ய வேண்டும் என்ற நல் மனதையுடையவனாக இருந்தான். அவனுடைய எண்ணங்கள் நன்மையானது என்று மற்றவர்கள் அறிந்திருந்தாலும், அவைகளை செய்ய முடியாதபடிக்கு, சில அதிகாரங்களாலும், சில உறவினர் நண்பர்களாலும், சில மதகுருக்களாலும், சில வேளைகளிலே சொந்த குடும்பத்தினராலும் தடைகள் வருவதை கண்ட போது, இவர்கள் இலவசமாக கிடைக்கும் நன்மைக்கும் எதித்ர்து நிற்கின்றார்களே என்று ஆச்சரியப்பட்டு, மனம் சோர்ந்து போனான். பிரியமான சகோதர சகோதரிகளே, ஒருவேளை இப்படியாக சூழ்நிலைகளை நீங்களும் எதிர்நோக்கியிருக்கலாம், ஆனால் மனம் சோர்ந்து, உங்கள் நல்ல சுபாவங்களை விட்டு விலகாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு தம்மை தாழ்த்தி மனித ரூபம் எடுத்து இந்த பூவுலகிற்கு வந்து, எப்படி வெற்றி வாழ்க்கை வாழ்வதென்பதை வாழ்ந்து காட்டினார். அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டார். ஆனால், அவர் சோதனையில் அகப்பட்டு, இழுப்புண்டு போகாமல், பாவம் ஏதும் செய்யாமல், யாவற்றையும் ஜெயம் கொண்டார். அவர் நன்மை செய்கின்றவராக சுற்றித் திரிந்தபோதும், அதிகாரங்களிலுள்ளவர்களும், ஊரிலுள்ள சிறப்பு குடிமக்களும், ஆசாரியர்களும், பொது மக்களில் நன்மை பெற்றவர்களும் அவரை எதிர்த்து நின்றார்கள். சொந்தக் குடும்பத்தினரும் அவரைக் குறித்து சந்தேகப்பட்டார்கள். அவரோடு உணவுண்டவர்கள்,அவரை மறுதலித்து, நண்பன் வேடம் போட்டு, காட்டிக் கொடுத்தார்கள். யாவராலும் அவர் புறக்கணிகக்கப்பட்டிருந்தார். ஆனாலும், அவர் எல்லா சூழ்நிலைகளும் மேற்கொண்டு வெற்றி சிறந்தார். எப்படியாக அவர் ஜெயம் கொண்டார்? யார் அவரை எதிர்த்து நின்றாலும், அவரோ ஒவ்வொரு காரியத்திலும் தம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே நோக்கமாக கொண்டார். அவரைப் போலவே நாமும், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நம்முடைய வாழ்வில் நிறைவேற்றுவதையே பிரதானமாக நோக்கமாக கொண்டு, முடிவு பரியந்தம் அதில் நிலைநிற்கும் போது, நாமும் வெற்றி சிறக்கின்றவர்களாக காணப்படுவோம்.

**யோவான் 4:34**

நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

**ஜெபம்**: வெற்றி சிறக்கப் பண்ணும் தேவனே, எதிர்ப்புக்கள் ஏளனங்கள் நம்முடைய வாழ்க்கையில் வந்தாலும், தளர்ந்து போகாமல், உம்முடைய சித்தத்தை செய்வதில் நிலைநிற்க எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சிந்தையை தரித்திருங்கள்

எதிர்து வந்தார்கள், உயர்த்த வந்தார்கள், தாழ்த்த வந்தார்கள், சோதிக்க வந்தார்கள், கொன்றுபோடும்படி வந்தார்கள், முத்தமிட்டு காட்டிக் கொடுக்க வந்தார்கள், இவையெல்வாவற்றிலும் ஆண்டவராகிய இயேசு பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்ய தம்மை ஒப்புக் கொடுத்தபடியால், யாவற்றையும் ஜெயங் கொண்டார் என்று நாம் பார்த்தோம். பிதாவாகிய தேவனுடைய சித்தம் செய்ய வேண்டும் என்று இலகுவாக சொல்லி விடலாம். ஆனால், தேவ சித்தத்தை செய்து முடிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? தேவ சித்தத்தை நிறைவேற்ற ஆதரவுகளும், உதவிகள் உண்டா? நிச்சயமாக உண்டு! முதலாவதாக, ஆண்டவராகிய இயேசு தம்மை தாழ்த்தி, தேவ சித்தம் செய்ய கீழ்படிந்தார். அவரைப் போல நாமும் கீழ்படிவும், மனத்தாழ்மையையும் அணிந்து கொள்ளவிடில், தேவ சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற முடியாது. ஆண்டவராகிய இயேசுதாமே, ஆவியானவராலே நடத்தப்பட்டார். அவரிடம் இருந்து அதே ஆவியை, அவருடைய நாமத்தினாலே, பிதாவாகிய தேவன்தாமே நமக்கு கொடுத்திருக்கின்றார். நாமும் தேவ ஆவியினாலே நடத்தப்பட இடங் கொடுக்க வேண்டும். தேவ ஆவியானவர்தாமே சகல சத்தி யத்திலும் நம்மை வழி நடத்திச் செல்வார். இவை யாவற்றிற்கும் அடித் தளமாக, ஆண்டவராகிய இயேசு தாமே, பிதவாகிய தேவனோடுள்ள உறவிலே உறுதியாக இருந்து வந்தார். அவரோடு பேசினார். அவர் கூறும் வார்த்தைகளை கேட்டார். அவர் கூறிய வார்த்தைகளை செய்கின்றவராக இருந்தார். அந்த வார்த்தைகள் பரிசுத்த வேதாகமத்தின் வழியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த சத்திய வார்த்தைகளை ஞாயிறு தோறும் தேவ செய்தி வழியாக கேட்கின்றோம். சபையிலே வேதபாடங்கள் வழியாக கற்றுக் கொள்கின்றோம். வாழ்வு தரும் ஜீவ வார்த்தைகளை நாம் கேட்கின்றவர்களாக மாத்திரமல்ல, அதன்படி செய்கின்றவர்களாகவும் நாம் அனுதினமும் முன்னேறிச் செல்ல வேண்டும். தேவ குமாரனாகிய இயேசு வழியாக பிதாவாகிய தேவனுடைய குமாரர் குமாரத்திகளாகப்பட்ட நாமும், அனுதினமும் ஜெபி க்கின்றவர்களாக காணப்பட வேண்டும். இப்படியாக நாம் நம் வாழக்கையை கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாக மாற்றிக் கொள்ளும் போது, உலகத்தை ஜெயிக்கின்றவர்களாக இருப்போம்.

**பிலிப்பியர் 2:8**

**அவர்மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.**

**ஜெபம்:** பெலன் தந்து நடத்தும் தேவனே, உம்முடைய வார்த்தையை ஆர்வத்துடன் கேட்கின்றவர்களாகவும், அதன்படி செய்கின்றவர்களாகவும் வாழ எங்களுக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபிக்க மறந்துவிடாதிருங்கள்

ஒரு தகப்பனானவர், வேலைக்கு செல்லும் தன்னுடைய மகனானவனை தொலை பேசி வழியாக அழைப்பு விடுத்தார். அந்த நேரத்திலே அவன் வேறு அலுவலாக இருந்ததால், "உன் உத்தியோக அலுவலாக அடுத்த ஊருக்கு போவதற்கு முன்னாதாக என்னோடு பேசுவதற்கு மறந்து போய்விடாதே" என்ற செய்தியை அவனுடைய தொலைபேசியிலே எழுதி அனுப்பி வைத்தார். அந்த வார்த்தைகளை வாசித்த மகனான வன், மாலையிலே அப்பாவை தொடர்பு கொள்ளுவேன் என்று தனக்குள் கூறிக் கொண்டு, பய ணத்திற்கு வேண்டிய ஆயத்தங் கள் முழுவதையும் பூர்த்தி செய் தான். காலையிலே எழுந்து, அடு த்த ஊருக்கு போன பின்பு, அப் பாவோடு பேசுவேன் என்று கூறிக் கொண்டு, அவன் அவசர வசரமாக, சக உத்தியோகத்தர் களோடு சேர்ந்து பயணம் செய் தான். அந்த ஊரிலே பெரிதான பிரச்சனை அவனுக்காக காத்தி ருந்தது. அதை அறியாத அவன், அந்த பிரச்சனை யினால், மனமு டைந்து சோர்ந்து போனான். மறுநாளிலே, தன் தகப்பனா னவரோடு தொலைபேசி வழியாக பேசினான். தனக்கு ஏற்பட்ட எதிர் பாராத பிரச் சனை கூறினான். அதற்கு தகப்பனானவர்: மகனே, நீ போவ தற்கு முன் னர் மறக்காதல் என்னோடு பேசு என்று உனக்கு எழுத்தி அனுப்பினேன் அல்லவா? நீ சென்றிருக்கும் ஊரைப் பற்றிய விவகா ரங்கள் யாவை யும் நான் நன்கு அறிந்திருக்கின்றேன். அதைப் பற்றி கூறும்படிக்கே என் னோடு பேசும்படியாக கூறினேன் என்றார். ஆம் பிரி யமான சகோதர சகோதரிகளே, சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணு ங்கள் என்று நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாம் அந்த வார்த்தைக்கு கீழ்படிந்து ஜெபிக்கும் போது, ஆவியானவர் நாம் செய்ய வேண்டியவைகளையும, செய்யக் கூடாதவைகளையும் உணர்த்துவார். அடுத்த ஊருக்கு சென்ற மகனானவன், சகல ஆயத் தங்களையும் சிறப்பாக செய்து, தன்னுடைய தகப்பனானவரோடு பேசுவ தற்கு மறந்து போனது போல, நீங்களும் முக்கியமான காரியங்களை செய்ய முன்பு, பல அலுவல்களில் சிக்குண்டு, நாளைக்கு ஜெபம் செய் யலாம் என்று தேவனோடு பேசுவதை பிற்போடாதிருங்கள். ஆவியா வர்தாமே சகல சத்தியத்திலும் உங்களை நடத்திச் செல்ல இடங் கொடுங்கள்.

**எபேசியர் 6:18**

எந்தச் சமயத்திலும் சகலவித மான வேண்டுதலோடும் விண் ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களு க்கா கவும் பண்ணும் வேண்டுதலோ டும் விழித்துக்கொண்டிருங்கள்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, உயர்விலும் தாழ்விலும், எந்தக் காரியமும் நான் உம்மை துதிப்பதையும், ஜெபம் செய்வததையும் தடுத்து விடாத படிக்கு எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒளியிலே நடவுங்கள்

ஒரு குடும்பத்தினர், பாடசாலை விடுமுறைநாட்களிலே, குடும்பமாக சுற்றுலா பயணமொன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டபடி, முன் குறித்த நாளிலே, பஸ் வண்டியிலே ஏறி பரபரப்போடு நீண்ட பயணத்தை ஆரம்பித்தார்கள். பாதிவழியிலே பஸ் வண்டி பழுதடைந்தது, மாலை நேரமானதால், காத்திருக்க கூடாமல், முதலாவது தரிப்பிடத்திற்கு செல்வதற்கு காட்டு பிரதேசம் வழியாக கால்நடையாக செல்ல வேண்டியிருந்தது. சீக்கிரமாக இருள் சூழ்ந்து கொண்டது. போகும் வழியோ தெரியவில்லை. பயணதிற்கு ஆயத்தம் செய்த போது, டார்ச் லைட்டை (Torchlight) எடுத்துக் கொள்ள மறந்து போய்விட்டார்கள். அதனால், போகும் வழிதெரியாமலும், பாதையிலே இருக்கும் பாதகமானவைகளை காணமுடியாமலும் தவித்தார்கள். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, வனாந்திரத்தற்கு ஒப்பாக இரு க்கும் இந்த பூமியை கடந்து சென்று கொண்டிக்கும் பரம யாத்திரிக ளாகிய நமக்கு, தேவனுடைய வார்த்தைகளே நம்முடைய கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாக இருக்கின்றது. இருளிலிருக்கும் உலகத்திலே நாம் மருண்டு போகமல் வாழ்வதற்கு சத்திய வேதம் இன்றியமையாதது. சில வேளைகளிலே, சில விசுவாச மார்க்கத்தார், பரிசுத்த வேதகமத்தை குறித்து நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம் என்று கூறுகின்றார்கள். ஆனால் அதின் உபயோகத்தை தங்கள் வாழ்விலே மறுதலிக்கின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, சுதாரமும் ஆரோக்கியமும் என்ற துறையிலே பட்டப்படிப்பை முடித்து, ஆரோக்கியமான வாழ்விற்கு ஆலோசகராக பணிபுரியும் சுகாதார ஆரோக்கி நிபுணரொருவர், தன் வேலையின் இடைவேளைகளிலே வெளியே சென்று புகை ப்பிடித்துக் கொள்வதை கண்ட சில வாடிக்கையாளர்கள், அவர் தான் கற்றுக் கொண்டதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் எதிரான காரியங்களை தன் வாழ்விலே நடப்பிப்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள். அதுபோலவே, ஒருவேளை நாம் வேத எழுத்துக்களை நன்றாக அறிந் திருக்கலாம் ஆனால், தகுந்த வேளையிலே அதை நம் வாழ்விலே கடைப்பிடிக்காமல் போவோமென்றால், நாமும் அந்த சுகாதார நிபு ணரைப் போல காணப்படும். எனவே, வாழ்வின் வெளிச்சமாகிய வேத வார்த்தைகளை ஒருபோதும் மறந்து போகாமல், அந்த வெளிச்சத்திலே வாழக்கடவோம்.

**சங்கீதம் 119:105**

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, பொழுதுவிடிந்து விடி வெள்ளி எங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தல த்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற உமது வசனத்தை கவனித் திருக்க வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | ஆனி 10 | 🕮 மாலை வாசகம் - மத்தேயு 6:19-20

# உங்கள் வாழ்வின் மேன்மை என்ன?

ஒரு வாலிபனானவன் தனது சிறு பிராயத்திலிருந்து ஆலயத்திலே தேவ கானங்களை தனது இனிமையான குரலிலே பாடி பக்தியோடு துதி ஆராதனைகளை வழிநடத்தி வந்தான். சில ஆண்டுகள் கடந் சென்ற போது, தேசிய விளையாட்டு போட்டிகள் ஆரம்பிப்பு விழாவிலே, தேசிய கீதத்தை பாடும்படியான அழைப்பை பெற்றான். பெற்றோருக்கோ எல்லையில்லா ஆனந்தம். தங்கள் உறவினர், நண்பர்களை தொலைபேசி வழியாக அழைத்து தங்கள் சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டாடினார்கள். போகுமிடமெல்லாம், அதைக் குறித்து மேன்மையாக பேசி கொண்டார்கள். தங்கள் மகனானவன், பாடும் போது, அவனை தொலைகாட்சி வழியாக பார்த்து ரசிக்கும்படியும், இணைத்தளத்திலே விருப்புக்களையும் ஆதரவையும் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். ஏனெனில், அவர்கள் இருதயத்திலே அவர்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப விழாவிலே பாடுவதற்கு தங்கள் மகனானவனுக்கு கிடைத்த சந்தர்ப்பம் மிகுந்த சிலாக்கியம் என்று கருதினார்கள். சகலகத்தையும் படைத்த உன்னதமான தேவனை ஆலயத்திலே பாடி ஆராதித்து வரும் தங்களுடைய மகனானவனைக் குறித்து தங்களுக்குள் பெருமிதமடைந்திருந்த போதும், அவன் ஆலயத்திலே ஆராதனைகளை வழிநடத்தி வருவதன், மேன்மையையும், அழைப்பையும், சிலாக்கியத்தையும், குறித்து ஒரு போதும் தங்கள் நண்பர்களோடோ உறவினர்களோடோ அவர்கள் பேசியதில்லை. ஏன் அவர்கள் பேசவில்லை? தங்கள் மகனானவன், தேவனை ஆராதிப்பதைக் குறித்து அவர்கள் இருதயத்தில் இருந்த மேன்மை என்ன? சற்று இந்த சம்பவத்தை சிந்தித்துப் பாருங்கள்! பின்பு, இந்த சம்பவத்தைக் மையமாக வைத்து உங்கள் வாழ்க்கை ஆரா ய்ந்து பாருங்கள். இன்று சில விசுவாச மார்க்கத்தார் எதை தங்கள் வாழ் வின் மேன்மை என்று எண்ணிக் கொள்கின்றாரகள்? பெற்றுக் கொண்ட இரசிப்பு, நித்திய ஜீவனுக்கான அழைப்பு, தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுதல், ராஜரீக ஆசாரியக் கூட்டம் என்று அழைக்க ப்படுதல் போன்ற அழியாத மேன்மைகளா? அல்லது திராள ஆஸ்திகள், உயர்ந்த கல்வி, பெரும் பதவிகள், செல்வாக்குகள், பெயர், புகழ் போன்றவைகளா? எவை உங்கள் இருயத்திலே மேன்மையாக தோன்றுகின்றது?

**கொலோசெயர் 3:1**

**நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

**ஜெபம்:** பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளை தேடுங்கள் என்று சொன்ன தேவனே, அழிந்து போகும் இந்த உலகத்தின் மேன்மைகள் என் மனக்கண்களை குருடாக்காதபடிக்கு என்னை காத்து வழிநடத்தவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆண்டவரின் ஆளுகை

பல விடயங்களில், நான் இருக்க வேண்டிய இடத்திலிருந்து தூரமாக போய்விட்டேன். பல ஆண்டுகள் கடந்து விட்டது. என் வாழ்க்கையிலே அநேக தவறான முடிவுகழளை எடுத்துள்ளேன். அவைகளால் ஏற்பட் டிருக்கும் பின்னடைவுகள் அதிகம். எப்படி இவைகளிலிருந்து விடுதலை அடைவது? எங்கே ஆரம்பிப்பது? எப்படி ஆரம்பிப்பது? என்று ஒரு மனிதனாவன் மனக் குழப்பத்தோடு, தனக்குள் நொந்து கொண்டான். அந்த மனிதனாவன் மட்டுமல்ல, அநேகர், வெளி உலகிற்கு தங்கள் வாழ்க்கைநன்றாகவே ஓடிக் கொண் டிருக்கின்றது என காண்பித்துக் கொள்கின்றார்கள். ஆனால், மனதி லோ தங்கள் தீர்மானங்களை குறி த்து சமாதானமற்றவர்களாக வாழ் கின்றார்கள். உண்மையை கூறி னால் எங்களை நியாயந்தீர்த்து விடு வார்கள் என்ற பயமும். எங்கள் நிலைமையை மற்றவர்கள் அறி ந்தால், தாழ்த்தப்பட்டு போவோம் என்ற சுய கௌரவமும், யாரை நம்பி எதை கூற முடியும் என்ற நம்பிக்கையற்ற நிலைமையும் மனிதர்கள் மனங்களை அழுத்துகின்றதால், மனதினிலே போராட்டமாக இருக்கின் றது. நெடுஞ்சாலையிலே அதிவேகமாக, செல்ல வேண்டிய திசைக்கு எதிராக ஓடிகட கொண்டிருக்கும் கனரக வாகனமானது, சரியான திசை க்கு செல்வ வேண்டும் என்றால், அதன் வேகத்தை தணித்து, நிறுத்தி, திசையை மாற்ற வேண்டும். இல்லை என்று அதன் சாரதி கூறுவானாக இருந்தால், அவன் பிழையான திசையிலே இன்னும் அதிக தூரம் சென் றுவிடுவான். அதுபோலவே, நம்முடைய வாழ்க்கையிலும், தவ றான தீர்மானங்களை சரி செய்வதற்கு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எங்கே ஆரம்பிப்பது? உங்கள் வீட்டின் அறைக்குள்ளே ஆரம்பிக்க முடியும். எப்படி ஆரம்பிப்பது, முழங்கால் படியிட்டு, நீங்கள் இருக் கின்ற வண்ணமாக உங்கள் வாழ்க்கை ஆண்டவராகிய இயேசு விடம் ஒப்புக் கொடுங்கள். வாழ்க்கையிலே தவறான தீர்மானங்களை எடுத்திரு ந்தால், அவைகளை அறிக்கையிடுங்கள். உண்மையுள்ள இருதய த்தோடு தேவனுடைய வழிநடத்துதலை கேளுங்கள். தம்மை உண் மையாக தேடுகின்ற யாருவருக்கும் சமீபமாயி ருக்கும் தேவன் தாமே, உங்கள் வேண்டுதலை கேட்டு, நீங்கள் நடக்க வேண்டிய வழியை காட்டுவார்.

**சங்கீதம் 145:18**

**தம்மை நோக்கிக் கூப்பிடு கிற யாவருக்கும், உண்மை யாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.**

**ஜெபம்**: உண்மை மனதோடு உம்மை தேடுகின்றவர்களுக்கு அருகிலிரு க்கும் தேவனே, என்னுடைய பாவங்களுக்குத்தக்கதாக எனக்கு சரிக்க ட்டால், உம்முடைய கிருபையை பொழிவதற்காக உமக்கு நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# மனம்திரும்பும் இருதயத்தை புறக்கணியார்

நீ என்னோடு இருந்து இந்தப் பண்ணையிலே வேலை செய்து பங்காளியாக இரு. காலப்போக்கிலே அவை யாவும் உன்னைச் சேரும் என்று ஒரு தகப்பனானவன் தன் குமாரனானவனுக்கு கூறிக் கொண் டான். பண்ணையிலே வேலை செய்வதென்றால், ஒழுங்கு முறைகளும் கட்டுப்பாடுகளும் உண்டு. காலையிலே நேரத்தோடு நித்திரைவிட்டு எழுந்திருக்க வேண்டும். இரவிலே நேரத்திற்கு நித்திரைக்கு செல்ல வேண்டும். நண்பர்களோடு உல் லாசமாக இருக்க முடியாது. என்று பல யோசனைகள் அந்தக் குமார னானவனின் மனதை குழப்பியது. இது வாலிப வயது! வாலிபம் நாட்கள் திரும்பி வராது என்றும், நான் தகப்பனுடைய வீட்டைவிட்டு வெளிறேப் போகின்றேன் என்றும் தீர்மானம் செய்து கொண்டு, வெளியூருக்கு சென்று தன் நண்பர்களோடு உல்லாசமாக நாட்களை கழித்து வந்தான். ஆண்டுகள் கடந்து சென் றதும், உலகத்தின் உண்மை நிலைமையை உணர ஆரம்பித்தான். அநி யாயமாக போன ஆண்டுகளை நினைத்து அநேக நாட்கள் துக்கித்துக் கொண்டிருந்தான். அவனுடைய நண்பர்களில் ஒருவன் அவனை நோக்கி: நீ எவ்வளவு காலம் இப்படி துக்கித்துக் கொண்டிருப்பாய். நீ உன் தகப்பனுடைய வீட்டிற்கு போய், அவரிடம் மன்னிப்பை கேட்டுக் கொள் என்று கூறினான். அந்த குமாரனானவனோ: நான் செய்த தவறுகளை பார்க்கும் போது, என்னையே நான் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. அப்பா, எப்படி என்னை ஏற்றுக் கொள்வார் என்றான். அதற்கு அவன் நண்பனானவன்: நீ உன் அப்பாவின் வீட்டிற்கு போனால் ஒழிய, அவர் உன்னை ஏற்றுக் கொள்வாரே இல்லை என்பது உனக்கு தெரியாது. உன்னை தாழ்த்தி, உன் வீட்டிற்கு போ. அவர் உன்னுடைய அப்பா! என்று கூறினான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, ஜெபம் செய்வது கடினமாக காரியம் அல்ல. ஒருவேளை இந்த உலகிலே உங்கள் அப்பாவோடு பேசுவது கடினமாக காரியமாக இருக்கலாம். ஆனால், நம்முடைய பரம பிதா அன்புள்ளவர். தம்ம ண்டை வரும் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் தள்ளிவிட மாட் டார். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற அவர் சமுகத்திற்கு, உண்மை யுள்ள மனதோடு செல்லுங்கள். அவர் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்கள் வேண்டுதல்களுக்கு நிச்சயமாக செவிகொடுப்பார்.

**சங்கீதம் 51:17**

**தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதய த்தை நீர் புறக்கணியீர்.**

**ஜெபம்:** மனந்திரும்பும் இருதயத்தை புறக்கணியாத அன்புள்ள தேவனே, நான் மிகுதியான என் வாழ்நாட்களை வீணிலே கழிக்காதபடிக்கு உம்மு டைய வார்த்தையின் படி வாழ என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | ஆனி 13 | 📖 மாலை வாசகம் – யோவான் 14:1 – 2

# அநுகூலமான துணையுமானவர்

ஒரு தேசத்தை அரசாண்டு வந்த ராஜாவானவன், அந்த தேசத்தின் பாதுகாப்பையும், படைப்பெலனை பலப்படுத்தும்படி, ஜனங்கள் மேல் சுமத்தப்பட்டிருந்த வருமான வரி வீதத்தை நியாயமான முறையிலே சற்று அதிகரித்தான். அந்த செய்தியை தன்னுடை சேவகர்கள் வழியாக ஜனங்களுக்கு அறிவிக்கும்படி கட்டளை கொடுத்தான். ஜனங்கள் அந்த செய்தியை விரும்ப மாட்டார்கள் என்றும், சிலர் கலகம் பண்ணுவார்கள் என்றும் சேவகர்கள் நன்கு அறிந்திருந்தும், ராஜ கட்டளையை பெற்றதால், பின்விளைவுகளை குறித்து எந்த தயக்கமும் இல்லாமல், தைரியத்தோடு சென்று செய்தியை அறிவித்தார்கள். அந்த சேவகர்கள் செல்லும் இடமெல்லாம், அவர்களுக்கு பின்பாக ராஜாவினுடைய விசேஷ இராணுவ படையானது சென்று கொண்டிருந்தது. இன்று மனிதர்கள், பொதுவாக இந்த உலகத்திலுள்ள தங்கள் அதிகாரங்களுக்கு கீழ்படிய ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். பாசடாலையிலே கல்வி கற்க வேண்டும், நல்ல உத்தியோகம் செய்ய வேண்டும், நகரத்திலே நல்ல வீட்டிலே வாழ வேண்டும். மற்றய நாடுகளுக்கு உல்லாசப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக பின்விளைவுகளை பற்றி சிந்திக்காமல், மேலான அதிகாரங்கள் கூறும் காரியங்களை விரும்பியோ, விரும்பாமலோ செய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஏனெனில், கீழ்படியாமையினால் ஏற்படக்கூடிய பாதகமான பின்விளைவுகளை தவித்துக் கொள்ளும்படிக்கு அதிகாரங்களுக்கு கீழ்படிகின்றார்கள். ஆனால், தேவனாகிய கர்த்தர் கூறும் வார்த்தைகளுக்கு கீழ்படிவதினால் உண்டாகும் மேன்மையான பலனை அடைவதைவிட, அவருடைய வார்த்தைக்கு கீழ்படிவதினால் இந்த உலகத்திலே ஏற்படக்கூடிய பின்விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதைக் குறித்தே அதிக கரிசனையுள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். சரீரத்தை கொல்ல வல்லர்களுக்கோ? அல்லது சரீரத்தோடு ஆத்துமாவை கொல்ல வல்லவருக்கோ? யாருக்கு கீழ்படிவது அவசியமானது? தேவனாகிய கர்த்தர் அநீதியுள்ளவர் அல்லர். அவருடைய வழிகள் நீதியானவைகள். இந்த உலக அதிகாரங்களிலே குறைவுகள் இருக்கலாம் ஆனால், மேலான அதிகாரத்தையுடைய சர்வ வல்லமையுள்ள தேவன் சம்பூரணராகவே இருக்கின்றார்.

**சங்கீதம் 46:1**

அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்

**ஜெபம்:** அன்பின் தேவனே, பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும் நீரே என் அடைக்கலமும் பெலனும் என்று சத்தியத்லே நிலைத்திருத்திக்கும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் உங்கள் பட்சத்திலிருந்தால்...

ஒரு கால கட்டத்திலே எகிப்தின் இளவரசன் என்று கருதப்பட்ட மோசேயானவனின் வாழ்க்கையாது திடீரென முற்றாக மாற்றமடைந்து விட்டது. மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். நாற்பது வருடங்கள் கடந்து போயிற்று, இப்பொழுது அவனுக்கு வயதாகிவிட்டது. முன்பிருந்த சரீர பெலன் குறைந்து போய்விட்டது. எகிப்தின் அரண்மனையிலே வாழ்ந்து வந்தவன் தற்போது ராஜாக்களுக்கும்பிரபுக்களுக்கும் முன்பாக நிற்பதற்கு தயக்கமுள்ளவனான். அந்த வேளையிலே, தேவனாகிய கர்த்தர் தாமே தம்முடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, வாக்களி க்கப்பட்ட தேசத்திற்கு வழிடத்தும்படி மோசே யானவனை அழைத்த போது, "ஜனங்கள் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். வல்லமை மிக்க பார்வோர் ராஜாவிற்கு முன்பாக நிற்பதற்கு நான் எம்மாத்திரம், நான் பேச்சு வல்லமையில்லாதவன்" என்று பின்விளைவுகளை குறித்து தயக்கம் அடைந்தான். தேவனாகிய கர்த்தரோ நான் உன்னுடனே இருப்பேன். நான் உனக்கு கற்பிக்கும்படி செய் என்று அவனை திடப் படுத்தி அனுப்பினார். அந்த நாள் முதல், தேவன் சொன்ன காரியங் களை அவன் செய்த போது, புற தேசத்தது பராக்கிரமமுள்ள ராஜாக் கள், அந்நிய தேசத்துப் படைகள், சொந்த ஜனங்களில் இருந்து மூப்பர் மற்றும் ஜனங்களின் மனத்திற்கு பிரியமில்லாத பின்விளைவுகள் ஏற்ப ட்டது. அதனால் பலமுறை அவர்கள் மோசேயை பகைத்தார்கள். கல் லெறிந்து கொல்லும்படி முயன்றார்கள். ஆனால், அவை யாவற்றிலும் கர்த்தர் அவனோடு இருந்தார். மோசேயானவன் கர்த்தருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். தேவனாகிய கர்த்தரோ அவன் சென்ற இடமெல்லாம் காரியத்தை வாய்க்கப் பண்ணினார். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றி முடிப்பதற்கு உங்களுக்கு தடையாக இருக்கும் காரியங்கள் என்ன? எதைக் குறித்து பயப்படுகின்றீர்கள்? உங்கள் பெலன் குறைந்து போய்விட்டது என்று பயம் மனதிலே தோன்றுகின்றதா? உங்களை சூழ்ந்திருப்பவர்களின் செல்வாக்குகள் மேலோங்கி இருக்கின்றது என்று மனக் சோர்ந்து போயவிடுகின்றீர்களா? தேவன் ஒரு காரியத்தை உங்களிடம் செய்யும்படி கூறினால், அதைக் குறித்து தயக்கமடையாதிருங்கள். பின்விளைவுகள் யாவற்றையும் அவரே பார்த்துக் கொள்வார்.

**யாத்திராகமம் 3:12**

**அதற்கு அவர்: நான் உன்னோடே இருப்பேன்;**

**ஜெபம்:** இருக்கின்றவராய் இருக்கின்ற தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் சவால்களை கண்டு மருண்டு போய்விடாதபடிக்கு, உம்முடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | ஆனி 15** | 📖 மாலை வாசகம் – அப்போஸ்தலர் 5:39

# சொந்தக் கருத்துக்களும் தேவ சித்தமும்

"கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்." என்று மோசேயின் மூத்த சகோதரியாகிய மிரியாமும் மூத்த சகோதரனான ஆரோனும், மோசே விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசினார்கள். மோசே யானவனோ பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ள வனாயிருந்தான். இன்றைய நாட்க ளிலே ஒரு மனிதனுக்கு விரோதமாக அவருடைய சொந்த சகோதரனோ அல்லது சகோதரியோ எதிர்த்து நின் றால், பொதுவாக மற்றய மனிதர்கள் என்ன கூறுவார்கள்? அவனுடைய சொந்த சகோதரர்களே எதிர்த்து நின்கின்றார்கள் என்று கூறிக் கொள்ள மாட்டார்களோ? மனிதர்கள் தங் கள் சொந்தக் கருத்துக்களை கூறிக்கொள்ள எந்தத் தடையுமில்லை. ஆனால் அந்த கருத்துக்கள் தேவனுக்கு விரோதமானதாக இல்லாதிரு ந்தால், அது அதை கூறிக் கொள்பவர்களுக்கு நல்லது. மோசேயான வனைக் குறித்து அவனுடைய அக்காவும், அண்ணாவும் விமர்சித்ததை, தேவனாகிய கர்த்தர் கேட்ட போது, அவருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது. அவர்கள் மோசேக்கு அல்ல தேவனுக்கு விரோதமாக எதிர் த்து நின்றதால், அவர்களுடைய வாழ்விலே பாதகமாக பின்விளைவுகள் உண்டாயிற்று. மோசேயின் பரிந்து பேசுதலினாலே அவர்கள் மரண த்திற்கு தப்பித்துக் கொண்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த தியானமாது ஊழியர்களுக்கு சார்பாக எழுதப்பட்டிருக்கின்றது என எண்ணங்கொள்ளாமல், தேவனுக்கு விரோதமாக நீங்கள் எண் ணங்கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். நீங்கள் தேவனுடைய ஊழியத்தை தாங்குகின்றவர்களாகவும், அதைக் குறித்து கரிசணையள்ளவர்களாகவும் இருந்தால், நீங்கள் ஒரு காரியத்தை செய்ய முன்பு, நீங்கள் செய்யப்போவதை ஆராய்ந்து பாருங்கள். தேவனுக்கு விரோதமாக யார் எதிர்த்து நிற்கக்கூடும்? தேவன் தம்மு டைய உழியர்களை விசாரிப்பார். உங்கள் நடவடிக்கைகள் சபை ஐக்கியத்தை குழப்பி, விசுவாசிகள் மத்தியிலே பிரிவினைகளை உண்டாக்காதபடி இருக்கும்படிக்கு, வேத வார்த்தைகளின் தியானத் தோடும், ஊக்கமான ஜெபத்தோடும் உங்கள் கிரியைகள் நடத்தப் படுவதாக.

**எண்ணாகமம் 12:7**

**என் தாசனாகிய மோசே யோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங் கும் அவன் உண்மையுள் ளவன்.**

**ஜெபம்**: உம்முடைய கிருபையினாலே என்னை நடத்திச் செல்லும் தேவனே, நான் என்னுடைய சுய நீதியின்படி உம்முடைய காரியங்களை நடத்த எண்ணங்கொள்ளாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதியில் வேற்றுமை இல்லை

மோசேயானவன் பிறந்த போது, அவன் திவ்விய சவுந்தரியமுள்ளவன் என்று அவனுடைய பெற்றோர்கள் கண்டார்கள். அதாவது, அந்த குழந்தையை குறித்த விசேஷித்த தன்மையை அவன் பிறப்பிலேயே அவர்கள் கண்டு கொண்டார்கள். அவன் வளர்ந்து பெரியவனாகிய போது, எகிப்தின் சகல சாஸ்திரங்களையும் கற்று தேர்ந்தவனாக இருந்தான். தன் சகோதர்கள் படும் பாடுகளிலே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், அவர்களை விடு தலையாக்க வேண்டும் என்ற நல் மனம் அவனுக்கிருந்தது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளுகடைய வாழ்விலே தேவன் முன்குறித்த ஒரு நேரமுண்டு. அந்த நேரம் முந்துவதுமில்லை. பிந்துவதுமில்லை. மோசேயானவன் அழைப்பை பெற் றவனாக இருந்த போதும், குறித்த காலத்திற்கு முன்னதாகவே, காரியங்களை தன் கையிலே எடுத்துக் கொண்டு, தன் சகோதரர்களுக்கு நீதி செய்ய வேண்டும் என்று முற்பட்டான். அவன் நல்லெண்ணங் கொண்டவனாக இருந்த போதும், சுயமாக அவன் எடுத்த தீர்மானங்களினால் பின் விளைவுகளுக்கு அவன் தப்பித்துக் கொள்ளக்கூடாதிருந்தது. பின்னர் அவன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொண்ட விசேஷித்த பாத்திரமாக திகழ்ந்தபோதும், அவன் எப்போதெல்லாம் தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவர் கூறுவதை செய்தானோ, தேவனானவர் அவனோடு இருந்து அவனுடைய காரியங்களை வாய்க்கப் பண்ணினார். அவனுக்காக வழக்காடினார். ஆனால், அவன் தேவனானவர் சொல் லாத காரியமொன்றை மேரிபாவின் தண்ணீர் விடயத்தில் செய்ததால், அவன் தேவனுடைய ஊழியக்காரனாக இருந்தபோதும், நீதியுள்ள தேவன் தாமே அவனை கண்டித்தார். அவனை தண்டித்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. விசுவாசிகள் தவறும்போது சிட்சிக்கின்ற வரும், தன்னுடைய ஊழியர்கள் தவறும் போது பாராமுகமாக இருப்ப வருமல்லர். இந்த பரம யாத்திரையின் பாதையிலே, அவரவருக்கு சில பதவிகள் அல்லது விசேஷித்த அழைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதனால், அவர்கள் தேவ நீதிக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. எனவே, பரம அழைப்பின் மேலான பந்தையப் பொருளின்மேல் கண்களை பதியவைத்து, அதை நோக்கி ஓடுங்கள். உபத்திரவங்களிலே பொறுமையாக இருங்கள். கீழ்படிதலை கர்த்தரிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். தேவனானவர் எல்லாவற்றையும் அறிந்திருகின்றார். அவர் நீதிபரர்

**உபாகமம் 10:17**

அவர் பட்சபாதம்பண்ணுகிற வரும்அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல

**ஜெபம்:** மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கின்றவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றீர் என்று உணர்ந்து நான் பொறுமையோடு என் பொறுப்புகளை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உபத்திரவங்கள் நேரிடும் போது

ஒரு ஊரிலே வாழ்ந்த தகப்பனானவனொருவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் வளர்ந்து வருகின்ற போது, மூத்தவன் அவ்வப்போது இளையவனை தொந்தரவு செய்து கொண்டு வந்தான். அதை அறிந்து கொண்ட தகப்பனானவர், இருவரையும் அழைத்து, நீங்கள் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டியவர்கள், ஒருபோதும் உங்களுக்கிடையில் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடாது என்று அறிவுரை கூறியிருந்தார். ஒரு நாள் மூத்தவன், இளையவனுக்கு தொடர்ச்சியாக தொந்தரவு செய்த போது, அவன் தன் தகப்பனானவரிடம் சென்று முறையிட்டான். தகப்பனானவரோ, மறுபடியும் அவர்களை ஒன்றுபட்டு வாழும்படி கேட்டுக் கொண்டார். இளையவனோ, தன் தமையனானவன், மன்னிப்பு கேட்க வேண்டும், அவன் செய்த குற்றத்திற்கு தண்டிக்கப்பட வேண்டும் என்று பிடிவாதமாக நின்றான். மூத்தவனும் சூழ்நிலையை இலகுவாக்க மனதில்லாதவனாய், மன்னிப்பு கேட்க மறுத்தான். அதனால், அந்த ஊரின் வழக்கப்படி, தகப்பனானவர், மூத்தவனை இளையவன் முன்னிலையிலே தண்டித்தார். அதைக் கண்ட இளையவனுக்கு, தான் நினைத்தபடி தமையனானவன் தண்டிக்கப்பட்டான் என்று மனத்திருப்பியடைந்தான். தமையனானவனோ, மனதிலே கோபம் மூண்டவனாக, இளையவனை நோக்கி: இது ஒரு தொடர்கதை, நான் இதற்கு பதில் செய்யும் காலம் வரும் என்று தன் வழியே போய் விட்டான். இளையவனோ, நீ மறுபடியும் தவறு செய்தால் நான் உன்னை சும்மாவிடப் போவதில்லை என்ற எண்ணத்துடன் இருந்தான். தகப்பனானவரோ, இருவருடைய மனக்கடினத்தையும், பகைமையையும் கண்டு மிகவும் மனவருத்தப்பட்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, இப்படிப்பட்ட சம்பவங்கள் கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களுக்குரியதல்ல. இப்படிப்பட்ட நடக்கைகள் கிறிஸ்துவின் சபைக்குரியதல்ல. இன்று மனிதர்கள் நீதி செய்யப்பட வேண்டும் என்று தீவிரிக்கின்றார்கள். தாங்கள் நினைத்த பிரகாரம் நீதி செய்யப்பட்டால் மனத்தி ருப்தியடையகின்றார்கள். அதனால் மனதின் மாம்ச இச்சைகள் நிறைவேற்றப்படுகின்றது. ஆனால், மறைவாக பகையையும் பிரிவினையும் மனைந்து பெருகிக் கொண்டு போகின்றது. நாம் பெற்றுக் கொண்ட அழைப்பு மேலானது. எனவே தீமையை நன்மையினாலே வெல்லவும், ஜெபத்திலே உறுதியாய் தரித்திருக்கவும் பழகிக் கொள்ளுங்கள்.

**ரோமர் 12:12**

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.

**ஜெபம்**: நீடியபொறுமையுள்ள தேவனே, நான் என் நீதி நேர்மையைக் குறித்து மனக்கடினம் அடையாமல், நன்மை செய்து பாடநுபவிப்பதன் மேன்மையை நீர் எனக்கு கற்றுத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய வேளைக்காக காத்திருங்கள்

அடிமைத்தனத்திற்குட்பட்டிருந்த தேவஜனங்கள், விடுதலையாக்கப்பட்டு, வனாந்திரத்தின் வழியாக பாலும், தேனும் ஓடுகின்ற கானான் தேசத்திற்கு மோசேயானவனின் தலைமையில் வழிநடத்திச் செலப்பட்டார்கள். இலட்சக்கணக்கான ஜனக்கூட்டத்திலே யுத்தத்திற்கு செல்லக்கூடிய ஆண்கள் மாத்திரம், சுமார் ஆறு இலட்சம் பேர் இருந்தார்கள். அந்த சந்ததியாரில், இரண்டுபேர் மாத்திரமே, வாக்களிக்கப்பட்ட கானான் தேசததிற்குள் சென்றார்கள். மிகுதியானவர்கள் யாவரும் வனாந்திரத்திலே மரித்துப் போனார்கள். அது யாருடைய குற்றம்? தேவனுடைய தவறா? மோசேயானவனின் தவறா? ஜனங்களுடையதவறா? ஜனங்கள் முறுமுறுக்கின்றவர்களும், முரட்டாட்டம் பண்ணுகின்றவர்களும், கீழ்படியாதவர்களும், இணங்காதவர்களும், இச்சிக்கின்றவர்களாகவும் இருந்தார்கள். அதனால், பாதி வழியிலே மாண்டு போனார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அந்த வனாந்திர யாத்திரைக்கு ஒப்பனையாக இந்த பூவுகிலே நாமும் பரம கானானை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். பத்துக் கன்னிகைகளிலே, தங்கள் மணவாளன் வர ஆயத்தத்தோடே காத்திருக்கும் புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைப் போல, நாமும் ஆயத்த முள்ளவரகளாக இருப்பதையே நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். மோசேயானவன் தேவ னுக்கு முன்பாக எல்லாவற்றிலும் உண்மையுள்ளவனாக இருந்தது போல, இன்று சிலர் உண்மையுள்ளவர்களாக இருக்காது போகலாம். அதனால் யாருக்கு நஷ்டம் உண்டாகும்? நீதி என்ன என்பதையும், சத்தியம் என்ன என்பதையும் அறிந்த நான், பரிசுத்த வேதாகமம் கூறும் தேவ ஆலோசனையின்படி நடக்காது போனால் என்னுடைய நிலைமை எப்படியாக முடியும்? அவருடைய தவறு. இவருடைய தவறு. எனக்கு அது இல்லை. உனக்கு இது இல்லை. என்று முறுமுறுத்து நம்முடைய இலக்கை தவறவிட்டுவிடாமல், உயர்விலும், தாழ்விலும், சோதனையிலும், வேதனையிலும், ஒருவேளை நன்மை செய்து பாடு அநுபவிக்க நேர்ந்தாலும், மற்றவர்களுடைய அநீதியிலும், குறைவிலும், அநியாயத்திலும் தரித்து நின்று விடாமல், பரிசுத்த வேதாகமம் தரும் அருமையான ஆலோசனைகளை பற்றிக் கொண்டு அவருடைய வேளைக்காக பொறுமையோடு காத்திருப்போமாக.

**ஏசாயா 40:31**

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்;**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, ஜீவ ஓட்டத்தின் பாதையிலே வரும் உபத்திரவங்களை கண்டு நான் முறுமுறுக்காமலும், முரட்டாட்டம் பண்ணாமலும் உம்முடைய வேளைக்காக காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வில் போராட்டங்கள்

இரண்டு தேர்ச்சிபெற்ற உதைபந்தாட்ட அணிகள், தேசிய உதைபந் தாட்டப் போட்டியிலே மும்முரமாக போட்டியிட்டுக்கொண்டிருந்தது. ஒவ்வொரு அணியிலும், சிலர் தங்கள் நிலையத்தை (கோல் போஸ்ட்) பாதுகாத்துக் கொள்வதிலும், வேறு சிலர் முன்சென்று எதிரணியின் நிலையத்திற்குள் பந்தை அடிப்பதற்கென்றும் வேறு பிரிக்கப்பட்டிருந்தார்கள். நம்முடைய வாழ்க்கையிலும் அனுதினமும் நமக்கு போராட்டங்கள் உண்டு. தேவ பிள்ளைகளாகிய நம்முடைய போராட்டங்கள், வாக்குவாதங்களும், சரீரபிரகாரமான சண்டைகளுமல்ல என்று நாம் கூறிக் கொள்கின்ற போதிலும், சில வேளைகளிலே மாம்சத்திற்குரிய போராட்டங்களாக மாறிவிடுகின்றது. நம்முடைய ஆவிக்குரிய போராட்டங்களிலே நாம் முன்சென்று எதிர்த்து தாக்கும் (Attacking) நேரங்கள் உண்டு. வேறு சில வேளைகளிலே நாம் நம்முடைய அரனாண பட்டணத்திற்குள்ளே புகுந்து நம்முடைய நிலையத்தை பாதுகாக்க (Defending) வேண்டிய நேரங்களும் உண்டு. இந்த இரண்டு காரியங்களையும் நாம் பரிசுத்தவேதாகமம் கூறும்படி வெற்றிகரமாக நடப்பிப்பதற்கு, தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு இன்றியமையாதது. நாம் நம்மைசுற்றி தேவனாகிய கர்த்தர் போட்டிருக்கும்பாதுகாப்பின் வேலிக்குள் இருக்கின்றவர்களாக காணப்பட வேண்டும். தேவ ஒழுங்குகளை மீறி, கடந்து சென்றபின்பு, நாம் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று கூறிக் கொள்வது அறியாமை. அதுபோலவே, எதிரியான பிசாசனவனுக்கு எதிர்த்து போராடி வெற்றி பெறும்படிக்கு, தேவனுக்கு கீழ்படிந்திருக்கின்றவர்காக காணப்பட வேண்டும். தேவனுக்கு கீழ்படியாதவன், பிசாசானவனுடைய பிடிக்குள் இருக்கின்றான். அப்படியானால் தேவனுக்கு கீழ்படியாதவன் எப்படி பிசாசாவனை ஜெயம் கொள்ள முடியும்? இவைகளை நாம் உணர்ந்து அறிந்து கொள்வதற்கு சத்திய வேதத்தின் தியானம் அவசியமானது. திருவசனத்தை கேட்கின்றவர்களாக மாத்திரமல்ல, அதை தியானித்து, அந்த அருமையான ஆலோசனைகளின் படி நாம் வாழ்க்கின்ற போது, நாம் நம்முடைய போராட்டங்களை தேவன் விரும்பும் பிரகாரமாக நடத்தி ஜெயங்கொள்கின்வர் களாகவும், ஆபத்துக் காலத்திலே தேவனுடைய பலத்த பாதுகாப்பிற்குள் சுகமாய் இருக்கின்றவர்களாகவும் காணப்படுவோம்.

**சங்கீதம் 32:8**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக்காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

**ஜெபம்**: காலத்திற்குரிய நல் ஆலோசனைகளை தந்து வழிநடத்திச் செல்லும் தேவனே, என்னுடைய விருப்பப்படி போராட்டங்களை நடத்தாமல், உம்முடைய சித்தப்படி செய்து முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வியாழன் \| ஆனி 20 | 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 5:8 |
| --- | --- |

# நல்ல போர்ச்சேவகன்

தன் பட்டணத்தின் வாசலை பாதுகாக்கும் ஒரு நல்ல போரச்சேவகன் எப்படியாக இருப்பான்? எப்போதும் விழிப்புள்ளவனாகவும், எச்சரிக்கை யுள்ளவனாகவும், தனக்கு கொடுக்கப்பட்ட ஆயுதங்களை எப்போதும் தரி த்தவனாகவும் தயார் நிலையிலே காணப்படுவான். நாமும் ஆண்டவரின் இயேசுவின் நல்ல போர்ச்சேவகனாக இருக்கும்படி அழைப்பை பெற்றி ருக்கின்றோம். எதிரியாகிய பிசாசானவ னையும், அவனுடைய தந்திரங்களை யும் எதிர்த்து போராடும்படி, நம்முடைய கர்த்தர்தாமே நமக்கு ஆவிக்குரிய சர் வாயுதவர்க்கத்தை தந்திருக்கின்றார். எனவே, நாம் அசதியாயிராமல், ஒரு நல்ல போர்சேவகனைப் போல, விழி ப்புள்ளவர்களாவும், எச்சரி புள்ளவர்க ளாகவும், நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை நாம் எப்போதும் தரித்து, ஆயத்துமுள்ளவர்களாக காணப்பட வேண்டும். சத்தியம் என்னும் கச்சை, நீதி என்னும் மார்க்கவசம், சமாதா னத்ததின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவா சம் என்னும் கேடகம், இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை அணி ந்து கொண்டவர்களாய் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை கரங்க ளிலேபிடித்தவர்களாக, வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும், ஜெபம் பண்ணுகின்றவர்களாக காணப்பட வேண்டும். இன்று சிலர், நாம் தேவ னுடையவர்கள எனவே சத்துரு நம்மை மேற்கொள்ள முடியாது எனவே பயப்பட தேவையில்லை என்று அறிக்கை செய்துவிட்டு, பட்டணத்தின் காவலிலே நின்று தூங்குகின்ற காவற்காரரைப் போல காணப்படகி ன்றார்கள். இந்த உலகத்தாரோடு சேர்ந்து அவர்களுடைய போக்கிலே, அவர்களோடு இசைந்தவர்களாக, அவர்கள் செல்லும், இரவு களியாட்ட விடுதிகளுக்கும், திரைப்பட அரங்குகளுக்கும், உல்லாச வாழ்க்கைக்கும் தங்களை ஒப்புக் கொடுத்துவிடுகின்றார்கள். பிரிமான சகோதர சகோ தரிகளே, நாம் தேவனுடையவர்கள், நாம் ஜெயங் கொள்ளுகின்றவர்கள் என்று அறிக்கையிடுகின்ற நாம், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள் வெறிகொள்ளுகிற வர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள். பகலுக்குரியவர்களா கிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, தேவனுடைய சர்வாயுதவர்க்கத் தை தரித்தவர்களாக, எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாக காணப்படு வோமாக.

**1 தெச 5:5**

**நீங்களெல்லாரும் வெளிச் சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமா யிருக்கிறீர்கள்; நாம் இர வுக்கும் இருளுக்கும் உள் ளானவர்களல்லவே.**

**ஜெபம்**: கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவனே, விசுவாச த்திலே உறுதியாய் இருந்து ஜெயங் கொள்ள என்னை பெலப்படுத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெலத்திற்கு அப்பாற்பட்ட போராட்டங்கள்

சிவந்த சமுத்திரம் முன்னாகவும், அக்காலத்திலே வல்லமைமிக்க ராஜ்யம் என்று கருதப்பட்ட எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் பிரதான இரதங்களோடு அவனுடைய சேனை பின்னாகவும், இரண்டிற்கும் இடையிலே சுமார் நானூறு வருடங்கள் அடிமைகளாக ஆளோட்டிகளால் வருத்தப்பட்டவர்களும், யுத்தத்தை குறித்து எந்த அனுபவமும் இல்லாதவர்களுமான இலட்சக் கணக்கான ஜனங்கள் நின்று கலங்கினார்கள். அந்த வேளையிலே தேவ ஜனங்கள் மிகவும் பயந்தார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்: நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். அன்று தேவ ஜனங்கள் தேவனுடைய பலத்த கரத்தின் அதிசய செயலை கண்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள். பரலோக யாத்திரிகளாகிய அருமையான சகோதர சகோதரிகளே, நம்முடைய வாழ்விலும் போராட்டங்கள் உண்டு. அவற்றுள் சில நம்முடைய பெலத்திற்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கலாம். போராட்டங்கள் என்று கூறும்போது, பொருளாதார நெருக்கடிகளையே சில விசுவாசிகள் கருத்தில் கொள்கின்றார்கள். அதுமட்டுமல்ல, தனிப்பட்ட வாழ்க்கையிலே மனதிலே உண்டாகும் போராட்டங்கள், குடும்ப வாழ்விலே குடும்பத்தினருக்கிடையிலே உண்டாகும் குழப்பங்கள், சபை ஐக்கியத்திலே சில விசுவாசிகளால் உண்டாகும் கருத்து முரண்பாடுகளும் கலகங்களும் இப்படியாக பல விதமான போராட்டங்கள் நம்முடைய வாழ்விலே உண்டாகலாம். எப்படிப்பட்ட போராட்டங்களாக இருந்தாலும், அவற்றை நாம் கர்த்தருடைய ஆலோசனையின்படியே ஜெயம் கொள்ள வேண்டும். சில வேளைகளிலே, சில காரியங்களை நாம் செய்யும்படி தேவ ஆவியானவர் பெலத்தையும் ஞானத்தையும் தந்து வழி நடத்துவார். வேறு சில வேளைகளிலே, நாம் கர்த்தருடைய வார்த்தையை நம்பி, விக்கினங்கள் கடந்து போகும்மட்டும், அவருடைய பாதத்திலே அமர்ந்திருக்க வேண்டும். அவர் நமக்காக யுத்தம் செய்வார். அவர் பூட்டப்பட்ட கதவுளை திறக்கின்றவரும், திறக்கப்பட்ட கதவுளை அடைக்கின்றவருமாயிருக்கின்றார். எனவே, சூழ்நிலைகளை உங்கள் பெலத்திற்கு மிஞ்சிப் போகும்போது, கலக்கமடைந்து, தளர்ந்து போகாமல், உங்கள் ஆத்துமா கர்த்தரை நோக்கி அமர்ந்திருக்கட்டும். அவர் காரியத்தை வாய்க்கப்பண்ணுகின்றவராய் இருக்கின்றார்.

**சங்கீதம் 62:6**

அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை.

**ஜெபம்:** எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனே, விக்கினங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, நம் உம்முடைய செட்டைகளின் நிழலிலே வந்து அமர்ந்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சீர்பொருந்துதல்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஜனங்கள் மத்தியிலே வன்முறைகள் பெருகிக் கொண்டிருந்தது. ஊரின் சட்டதிட்டங்களின்படி குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு போனதினாலே, அந்த ஊரின் மூப்பர்கள் ஒன்றுகூடி இந்த பாதகமான மாற்றத்தின் மூலகாரணம் என்ன என்று பல நாட்கள் ஆராய்ந்து பார்த்தார்கள். அவர்களின் ஆராய்ச்சிகளின்படி, அந்த ஊரிலே இயங்கி வந்த சில பாடசாலைகள், வெளியூர்களிலிருந்து மாணவர்களை கவர்ந்து கொள்வதற்காக, பாடசாலை ஆரம்ப நாட்களிலிருந்த நெறிமுறையான நல்ல ஒழுங்கு முறைகளை, படிப்படியாக தளர்த்தி, நவீன நாகரீகமான பாணிகளுக்கு அதிகதிகமாக இடங் கொடுத்து வந்ததால், தேவ பயம், மூத்தவர்களை கனம் பண்ணுதல், போதனைகளை கேட்குதல் போன்றவைகள் பிள்ளைகளின் வாழ்விலே குறைவுபட்டிருப் பதையும், அதன் விளைவாக, அவர்கள் துணிகரமுள்ளவர்களாக மாறிக் கொண்டு போவதையும் அவதானித்தார்கள். வெளியூர்களின் செல்வாக்கு அந்த ஊரிலே அதிகரித்துக் கொண்டு சென்றதால், அந்த ஊர்களி லிருக்கும் சில தகாத பழக்கவழக்கங்களும் இந்த ஊரிலே அதிகரிக்க ஆரம்பித்தது. எனவே, அந்த மூப்பர் சங்கமானது, ஊரைக் குறித்தும், அந்த ஊரின் ஜனங்களின் எதிர்காலத்தைக் குறித்தும் கரிசணையுள்ள வரகளாக இருந்ததால், பாடசாலையின் ஆரம்ப வகுப்புகளிலிருந்து மறு ம்படியும் நெறிமுறையான, நல்ல ஒழுங்கு முறைகளை கற்பிக்கும்படி ஆரம்பித்தார்கள். அருமையான சகோதர சகோதரிகளே, பிள்ளைகள் நடக்க வேண்டிய வழிகளை அவர்களுக்கு போதியுங்கள், அவர்கள் வளர்ந்தும் அதை விட்டுவிடாதிருப்பார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனால், இன்று சில சபை ஐக்கியங்களிலே, அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், செல்வாக்குள்ளவர்களை சபைகளிலே தக்கவைப்பதற்காகவும், பரிசுத்த அலங்காரத்தின் வரைவிலக்களை மாற்றி, ஒழுங்கு முறைகளை தளர்த்தி விடுகின்றார்கள். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் இடமாக ஏற்படுத்தப்பட்ட சபையானது, வேத வார்த்தைகளின்படி சீர்பொருந்துதலைக்குறித்து சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் கற்றுக் கொடுப்பதற்கு பதிலாக, அவர்கள் யாவரையும தங்களோடு எப்படியாவது தக்கவைத்துக் கொள்ளாலாம் என்பதிலே அதிக கவனமெடுக்கின்றார்கள். நீங்களோ கர்த்தருடைய வேதத்தை கருத்தோடு பற்றிக் கொண்டிருங்கள்.

**2 தீமோத்தேயு 3:17**

**அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**

**ஜெபம்:** வார்த்தையை அனுப்பி குணமாக்குகின்ற தேவனே, நான் உமக்கு முன்பாக தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மீண்டும் குற்றம் செய்துவிட்டேன்

ஒரு பாடசாலையிலே கல்வி கற்று வரும் மாணவனொருவன் குற்ற மொன்றை செய்ததினாலே, அவனுடைய வகுப்பு ஆசிரியர், அவனு டைய பெற்றோரை அழைத்து, நடந்த சம்பவத்தைக் குறித்து விபரித்து கூறினார். அந்த மாணவனுடைய தகப்பனானவர், அந்தக் காரியத்தை தான் கவனிப்பதாக உறுதிமொழி கூறி, தன் மகனானவனனை இக் கட்டான சூழ்நிலையிலிருந்து விடுவி த்தார். அவன் வீடு திரும்பியதும், அவனுடைய பொறுப்பற்ற செய் கையை கடிந்து கொண்டு, அவனு டைய தவறான செய்கைகளினாலே வரக்கூடிய பாதகமான பின்விளை வுகளை எடுத்துக்கூறி, இனி அப்படி செய்யாதே என்று அறிவுரை கூறி னார். அவருடைய மகனானவனும், தன் தவறான செய்கையை குறித்தி உண்மையாக மனம்வருந்தியதை அவர் கண்டு கொண்டார். சில ஆண் டுகள் கடந்து சென்ற பின்பு, எதிர்பாராத விதமாக, அவருடைய மகனா னவன் வேறறொரு குற்றமொன்றிலே அகப்பட்டுக் கொண்டான். அவன் உடனடியாக தன் தகப்பனானவரை அழைத்து, அப்பா, நான் தவறு செய்தது உண்மை. ஆனால் நான் அதை திட்டமிட்டு செய்யவில்லை என்று கண்ணீரோடு தகப்பனாவரிடம் கூறினார். அவன் அதை திட்ட மிட்டு செய்யவில்லை என்பதை தகப்பனானவரும் அறிந்து கொண்டார். ஆனாலும், அவன் தான் நிற்க வேண்டிய இடத்திலே நிற்காமல் போன தினாலேயே அது நேரிட்டது என்று யாவரும் அறிந்து கொண்டார்கள். அவனை மறுபடியும் கடிந்து கொண்ட தகப்பனானவர், அவனுக்கு உதவி செய்ய ஆயத்தமுள்ளவராகவே இருந்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, "இனி அப்படி செய்யாதே" என்று அவனுடைய தகப் பனானவர் முன்பு கூறியிருந்தார். அதன் பொருள் என்ன? இந்த உலக த்திலே நீ இனி தவறிவிடக்கூடாது என்பதா? இனி நீ தவறு செய்தால் உனக்கு மீட்பு இல்லை என்பதா? இனி சம்பூரணனான வாழ வேண்டும் என்பதா? சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் பரிசுத்தமுள்ள வர்களாக வாழ வேண்டும் என்று நம்முடைய பரம பிதா, அதற்கு தேவையான யாவற்றையும் நமக்கு கொடுத்திருக்கின்றார். ஆனாலும், அவருடைய பிள்ளைகள் தவறிப்போகும் வேளையிலே அவர் அவர்களை முற்றாக தள்ளிப்போடுவதில்லை. நம்முடைய நிலைமை நன்றாக அறிந்த, பரம பிதா ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகின்றது போல அவருக்கு பயந்து உண்மையள்ள இருதயத்தோடு மனந்திரும்புகின்ற வர்களுக்கு மனதுருகின்றவராக இருக்கின்றார்.

**சங்கீதம் 103:13**

**தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்**

**ஜெபம்:** என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டின தேவனே, என் பெலவீன நேரங்களில் நீர் என் னைத் தாங்கி, துணிகரமான பாவத்திற்கு என்னை விலக்கி காத்தரு ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விரிவும் விசாலமுமான வாசல்

ஒரு ஊரிலே தங்கள் இரண்டு சிறு பிள்ளைகளோடு வாழ்ந்த பெற்றோரானவர்கள், தங்கள் வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்குவிட தீர்மானம் செய்து, விளம்பரப்படுத்தினார்கள். அந்த ஊருக்கு புதிதாக வந்த இரண்டு வாலிபர்கள் அந்த இடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்கள். அந்த வாலிபர்கள் நற்பண்புகளோடு தங்கள் பிள்ளைகளிடத்தில் பழகி வருவதை கண்டு சந்தோஷப்பட்டார்கள். நாளாடைவிலே அந்த வாலிபர்கள் புகைப்பிடிக்கும் பழக்கமுடையவர்கள் என்று கண்டு ஆச்சியப்பட்டார்கள். எனினும், அவர்கள் வீட்டிற்குள் புகைக்காமல், வெளியிடங்களிலே புகைக்கின்றார்கள், அது அவர்களுடைய பாடு என்று விட்டுவிட்டார்கள். சில மாதங்கள் கடந்த பின்பு, வருடத்தின் கடைசி நாளிலே, வேறு சில வாலிபர்களும் வந்து அந்த வீட்டிலே, நடுஇராத்திரி வரை ஆடிப்பாடி உல்லாசமாக இருந்தார்கள். அதுவும் வருடத்தில் ஒருமுறை நடைபெறுகின்றது என்று கூறி வீட்டார் அதையும் விட்டுவிட்டார்கள். காலப்போக்கிலே, அவர்கள் வீட்டிலே மதுபானம் அருந்தி வெறி கொள்கின்றார்கள் என்று கண்டு கொண்டார்கள். அந்த வாலிபர்கள் வாடகையை ஒழுங்காக கொடுக்கின்றார்கள், பிள்ளைகளோடு நட்பாக பழக்கிக் கொள்கின்றார்கள் என கூறி அவர்களை அப்படியே விட்டுவிட்டார்கள். ஒரு நாள் இரவு அவர்கள் குடும்பமாக உணவு உண்டு கொண்டிருக்கும் போது, அவர்களுடைய பிள்ளைகளில் ஒருவன், நானும் வளர்ந்து அந்த அண்ணாமார் மாதிரி வரவேண்டும் என்று அவர்கள் பேசக்கேட்டு சில நெறியற்ற வார்த்தைகளைக் கூறினான். அதைகேட்ட தகப்பனானவர் கோபம் கொண்டு தன் மகனானவனை கடுமையாக கண்டித்துப் பேசினார். அவர்கள் எவ்வளவு கண்டித்தாலும் அந்த பிள்ளையானவனின் மனதிலே அந்த வாலிபர்களின் போக்கு நன்றாக பதிந்து விட்டது. அந்தப் பெற்றோராவர்கள். மேலதிக வருமானத்தை விரும்பி தீமையறியாத தங்கள் பிள்ளைகளின் மனதிலே தவறான வித்தை விதைத்து விட்டார்கள். பிரியமாவர்களே, இவ் வண்ணமாகவே இன்று சில ஐக்கியங்களிலும், தங்கள் கதவுகளை அகலமாக திறந்து, எப்படிப்பட்டவர்களும் வரலாம் என்று கூறி, வந்தவர்களை வந்த வண்ணமாகவே கால எல்லையின்றி இருப்பதற்கு இடங்கொடு த்துவிடுகின்றார்கள். அப்படிப்பட்டவர்களை கவனித்து வளரும் சிறுபிள் ளைகளைக் குறித்து யார் பதில் கூறுவது? எனவே விசாலமான வாசல் களை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**மத்தேயு 7:13**

**இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.**

**ஜெபம்:** நீதியும் பரிசுத்தமுமுள்ள தேவனே, உம்முடைய சத்திய வார்த்தைகளை சமரசம் செய்யாமல், உள்ளபடி போதிக்கவும், அதன்படி நடக்கவும் எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்

"என்னாலேயன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறிய அரவணைக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே, வாழ்விலே வருதப்பட்டு பாரம் சுமப்பவர்கள் எல்லாரையும் இளைப்பாறுதல் பெறும்படிக்கு தம்மண்டை வருமாறு பரிவாக அழைக்கின்றார். இந்த உலகிலே வாழ்வடைய வேறு வழியேதும் இருக்கவில்லை. அதனால்தான் மனிதகுலம் பாவத்தில் அழிந்து போய்விடாமல், பரலோகத்தில் நித்திய ஜீவனை அடையும்படி, ஆண்டவராகிய இயேசுதாமே விண்ணுலகைவிட்டு, தம்மை தாழ்த்தி, மண்ணுலகிற்கு வந்தார். எத்தனை கோடி செலவு செய்தாலும், உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தை மனிதர்களுக்கு இலவசமாக கொடுக்கும்படிக்கு அவர் சித்தமுள்ளவராக இருக்கின்றார். ஆனால், மனிதர்களோ, அந்த அழைப்பை உணர்ந்து கொள்ளாமல், தங்கள் வெவேறு கிரியைகள் வழியாக சமாதானத்தை நாடித் தேடுகின்றார்கள். சில வேளைகளில், சில விசுவாசிகள் கூட இந்த சத்தியத்தை மறந்து போய்விடுகின்றார்கள். மனிதர்களை தண்டிப்பதில் அன்புள்ள தேவன்தாமே விருப்பமுடையவர் அல்லர். அவர் துன்மார்க்கர் தங்கள் பாவத்தில் அழிந்து போவதில் பிரியப்படுகின்றவருமல்ல. அப்படியானால், விசுவாச மார்க்கத்தாரின் வாழ்விலே சில நெருக்கங்களை தேவன்தாமே அனுமதிக்கின்றார். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படிக்கும், அவர்கள் தம்மைப்போல மாறும் படிக்கும் தேவனானவர் சித்தமுள்ளவராகயிருக்கின்றார். யார் இந்த பரிசுத்தவான்கள்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத இரத்தத்தினாலே உண்டான மீட்பை பெற்ற யாவரும் பரிசுத்தவான்களாகும்படி அழைப்பை பெற்றிருக்கின்றார்கள். அந்த அழைப்போடு பரிசுத்தமாகுதல் முடிவடைந்து போவதில்லை. ஒரு சகோதரனின் குற்றத்தை மன்னித்து விடுவதோடு ஒரு விசுவாசியாவன், தேவ சாயலை அடைந்து விடுவதில்லை. அவன் நாளுக்கு நாள் மாற்றமடைய வேண்டும். ஆனால், விசுவாசிகளின் வாழ்க்கையிலோ, சில வேளைகளிலே, சில காரியங்களிலே மாற்றமடைவதற்கு தங்களை விட்டுக்கொடுக்காமல், தங்கள் மனதை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். அவர்கள் உணர்வடையும்படிக்கு சில வேளைகளிலே, பிதாவாகிய தேவன்தாமே சில சிட்சைகளை வாழ்க்கையிலே அனுமதிக்கின்றார். அவைகள் வழியாகவும் அவர் தம்முடைய பிள்ளைகளை சீர்பொருந்தப் பண்ணுகின்றார்.

**2 கொரிந்தியர் 4:16**

**எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், உம்முடைய வார்த்தையின் வழியிலே வாழ்ந்து, மனதை கடினப்படுத்தாமல், அனுதினமும் உம்முடைய சாயலிலே வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் நெருக்கங்களுக்கு யார் காரணம்?

தன் மகனானவன் வாலிப பிராயத்தை அடைந்ததும், சில புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொண்டதை கண்ட தகப்பனானவர், குறிப்பாக ஒரு வாலிபனைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி பல தடவைகள் தனக் மகனானவனுக்கு அறிவுரை கூறிவந்தார். அதற்கு மகனானவன்: அப்பா, நீங்கள் நினைப்பது போல அவன் நெறிகெட்டவனல்ல. அவன் அப்படி இருந்தாலும், நான் அவனுடைய வழியிலே செல்வதற்கு மதியீனமுமல்ல என்று கூறி தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். அநேக ஆண்டகள் சென்ற பின்பு, மகனானவன் திருமணமாகி சிறு பிள்ளைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் போது, ஒரு நாள் பொலிசார் அவனை விசாரணைக்குட்படுத்தும்படி நீதிமன்றத்தின் அனுமதியோடு வந்தார்கள். குறிப்பிட்ட அந்த நண்பனின் நட்பின் நிமித்தமாக, அவன் வாழும் அயலிலே அவன் கனவீனம் அடையத்தக்தாக, அவனை பல முறை விசாரணைக்குட்படுத்தினார்கள். நீதியாக வாழ்ந்து வரும் எனக்கு ஏன் தேவனானவர் என்னை இப்படி சோதிக்கிறார் என்று அந்த மகனாவன் முறுமுறுத்தான். அதை கேட்டுக் கொண்டிருந்த, வயதான அவனுடைய தகப்பனானவர், மகனே: தேவன் உன்னை இந்த சோதனைக்குள் தள்ளவில்லை. பெற்றோரின் ஆலோசனைகளை நீ அசட்டை செய்ததால், நீயே உன்னை இந்த சோதனைக்குள் தள்ளிவிட்டாய் என்று கூறினார். ஆனாலும், நீ இப் போது நல் ஆலோனைகளை கேட்டு அதன்படி நடந்து கொண்டால், தேவனானவர் உனக்கேற்பட்ட தீமைகளை நன்மையாக மாற்று வார் என்று அறிவுரை கூறினார். பிரியமான சகோதர சகோதரிகளே, "தேவன் ஏன் என்னை இப்படி சோதிக்கின்றார்" அல்லது "இது பிசாசானவனின் கரம்" அல்லது "அந்த சகோதரனால் இந்த தொல்லை எனக்கு வந்தது" என்று விசுவாசிகள் பொதுவாக, தங்கள் பின்னடைவுகளுக்கு தேவனை அல்லது பிசாசானவனை அல்லது மற்றவர்கள் குற்றம் சாட்டு கின்றதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மேலே கூறப்பட்ட சந்தர்பத்திலே அந்த மகனானவன், தகப்பனுடைய எச்சரிப்பின் சத்தத்தை அசட்டை பண்ணினதால், அவனுடைய நண்பன் வழியாக பல தொல்லைகள் தன் வீட்டிற்குள் வர இடம் கொடுத்தான். கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக் கேதுவானது. அவருக்கு பயந்து அவருடைய ஆலோசனைகளின் வழியிலே நடப்பவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான். தீமை அவனை அணுகாது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, வாழ்வில நெருக்கங்கள் ஏற்படும் போது, மற்றவர்கள் குற்றம் கூறுவதைவிட்டுவிட்டு, நாம் நம்முடைய வழிகளை ஆராய்ந்து பார்த்து கர்த்தரிடத்தில் திரும்பக் கடவோம்.

**நீதிமொழிகள் 19:23**

**கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது;**

**ஜெபம்:** பரலோக பிதாவே, நீர் விளம்பின வேதத்தின் ஆலோசனைகளை நான் அசட்டை செய்து தள்ளிவிடாமல், முழுமனதோடு உம்முடைய வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மீறுதல்கள் எல்லாம் தேவ சிட்சையல்ல

ஒரு தகப்பனானவன் தான் நேசிக்கின்ற புத்திரனை சிட்சிக்கின்றது போல, நம்முடைய தேவனானவரும் நம்மை கடிந்து கொண்டு சிட்சிக்கின்ற நேரங்கள் உண்டு என்பதைக் குறித்து கடந்த நாட்களில் தியானித்தோம். விசுவாசிகளுடைய வாழ்விலே ஏற்படும் எல்லா நெருக்கங்களும் தேவனுடைய சிட்சை என்று கூறிக் கொள்ள முடியாது. எரிந்து கொண்டிருக்கும் அடுப்பிலே கையைப் போடாதே என்று ஒரு தகப்பனானவன், தன் மகனானவனுக்கு அறிவுரை கூறி, கண்டித்து வந்தார். அவன் சொல்லு மீறி நெருப்பிலே விரலை வைக்க செல்லும் வேயிலே, அவனை சிட்சித்தார். ஆனால், அவனோ எப்படியாவது அந்த நெருப்பிலே கையை வைத்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமுடையவனாக இருந்த தால், சந்தர்ப்பம் கிடைத்த போது, கையை நெருப்பிலே வைத்தான். அதனால் அவனுக்கு வேதனையுண்டாயிற்று. “சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறதுபோலிருக்கும் ஆதலால் விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு.” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனாலும், சில விசுவாசிகளோ, விவாதம் செய்வதை தங்கள் பெலன் என்று எண்ணி, அதை விட்டுவிடாதிருக்கின்றார்கள். அதன் முடிவு என்னவாக இருக்கும்? அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு என்ற தேவ ஆலோசனையை தள்ளி, தரித்து நிற்பேன், சங்கதி என்ன என்று ஆராய்வேன் என்று கூறுபவனின் வழி எப்படியாக இருக்கும்? பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர் என்பதை விசுவாசிகள் யாவரும் அறிந்திக்கின்றார்கள். அதை வாஞ்சித்து நாடித் தேடுகின்றவன் தன்னையே தான் கண்ணிகளுக்குள் சிக்க வைத்து கொள்கின்றான். நாம் பாவத்திற்குட்படாதபடிக்கு பிதாவானவர் நம்மை சிட்சிக்கின்றார். ஆனால், இல்லை நான் அதை நாடித் தேடுவேன் என்று மனதிலே தீர்மானம் செய்து கொள்பவன், திருடனாகிய பிசாசானவன் உள்ளே நுழைவதற்கு தன் இதயக் கதவை திறந்து விடுகின்றான். அப்படி செய்கின்றவன், திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் என்ற வார்த்தையின்படி பல வேதனைகளை தன் வாழ்விலே அனுமதிக்கின்றவனாக வாழ்கின்றான். எனவே, கர்த்தருடைய வார்த்தையை கேட்டு, இடது புறமோ, வலது புறமாக சாயாமல், உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செய்வைப்படுத்துவார். சத்திய ஆவியானவர்தாமே பெலப்படுத்தி நடத்தி செய்வார்.

**நீதிமொழிகள் 3:5**

**உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்பட்டு போகாதபடிக்கு என்னுடைய என் சிந்தையை உம்முடைய வார்த்தையினால் நிறைத்து காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பொல்லாங்கான சோதனைகள்

எந்த ஒரு தகப்பனானவனும், தன் மகனானவன் வெறிகொள்வானோ என்று அறியும்படிக்கு தன் வீட்டிலே, மதுபானம் உள்ள போத்தல்களை வெளியரங்கமாக வைத்து தான் நேசிக்கும் பிள்ளையை சோதிப்ப தில்லை. கருப்பொருளாவது, ஒரு நல்ல தகப்பனானவன் தீமையினாலே தன் பிள்ளைகளை சோதிப்பதில்லை. ஆனால், தன்னுடைய மகனாவன், தெரு வழியாக தன் நண்பர்களோடு போகும் போது, தெருவின் அப்புறத் திலே இருக்கும் மதுபான சாலை க்குள் தன் மகனானவன் போகா தபடிக்கு அவனுக்கு அறிவுரை கூறு வார். ஏனெனில், தீமையானது இந்த உலகத்திலே ஆளுகை செய்கின்றது. அந்த தீமையிலிருந்து தன்னுடைய மகனானவன் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சில வேளை களிலே அவனை தடுத்து நிறுத்துகின்றார். ஆனால், அந்த மகனானவன், தான் வயதிற்கு வந்து விட்டேன். நன்மை எது? தீமை எது? என்று பகுத்தறியும்படி எனக்கு நல்ல அறிவு இருக்கின்றது என்று கூறி, தன் தகப்பனானவனின் சொல்லை கேளாமல், தன் நண்பர்களோடு சேர்ந்து அந்த மதுபான சாலைக்கு சென்று வெறிகொள்வானாக இருந்தால், அவன் தனக்குண்டான இச்சையினாலே இழுப்புண்டு, தன்னை தானே சோதனைக்குட்படுத்திக் கொள்கின்றான். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் பாவம் செய்ய வேண்டும் என்று, பாவ சேற்றிலே விழுந்து கிடக்க வேண்டும் என்றும் பிதாவானவர் நம்மை சோதிப்பவரல்ல. மாறாக, பாவ சேற்றிலே விழுந்து விடுதலையடைய முடியாதிருக்கின்றவர்களை, மீட்கும்படியாகவே அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உல கத்திற்கு அனுப்பினார். எனவே, அசுத்தங்களில் சிக்குண்டு சோதிக்க ப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல் லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிற வரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவர் நன்மையான ஈவுக ளையும் பூரணமான வரங்களையும் நமக்கு பரத்திலிருந்து அனுப்பி வைத் திருக்கின்றார். அதே வேளையில், பரம யாத்திரிகளாக இந்த உலகத்தை கடந்து கொண்டிருக்கும் நாம், பொல்லாங்கனின் தீமையான வஞ்சகத்திலே விழுந்து விடாதபடிக்கு, நல்ல ஆலோசனைகளை தம்மு டைய வார்த்தை வழியாக தருகின்றார். அதை மீறி நடப்பவன், இச்சை யானது தன்னை ஆளுகை செய்ய இடம் கொடுப்பதால், அவன் பாவம் செய்கின்றான். நீங்களோ தேவ வார்த்தையில் நிலைத்திருங்கள்.

**யாக்கோபு 1:13**

**தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதி க்கிறவருமல்ல.**

**ஜெபம்:** நன்மையான ஈவுகளை எனக்கு தருகின்ற நல்ல தகப்பனே, நான் என்னுடைய சுய இச்சைகள் என்னை ஆள இடங் கொடுக்காதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பீர்களாக

வாலிப வயதிற்கு வந்த தன் மகனானவனின் பிறந்த நாளென்று அவனுக்கு கை தொலைபேசி சாதனத்தை பரிசாக கொடுத்த பெற்றோர். வாலிப நாட்களிலே எங்கு செல்ல வேண்டும்? என்ன செய்ய வேண்டும் என்ற மட்டுமல்ல, எங்கு செல்லக்கூடாது என்றும் என்ன செய்யக்கூடாது என்றும் அவனுக்கு விளக்கமாக கூறியிருந்தார்கள். ஒரு நாள் அவன் தன் நண்பர்களோடு, பெற்றோர் போகாதே என்று கூறிய வயல் பக்கமாக சென்றான். அதனால் தன்னை பிரச்சனைக்குள்ளாக்கிக் கொண்டான். உடனடியாக, தன் கைத் தொலை பேசிவழியாக தன் தகப்பனான வரை அவசரமாக அழைத்தான். அந்த வாலிபனுடைய தகப்பனானவர், பொலிஸ் அதிகாரியாக இருந்தால், அவர் உடனடியாக வந்து அவனை பாதுகாப்பாக தன் வாகனத்திலே கூட்டிச் சென்றார். பெற்றோர் அவனை கடிந்து கொண்டார்கள். சில நாட்களுக்கு பின்னர், அவன் மறுபடியும், ஊரிலே, பெற்றோர் போகாதே என்று கூறிய வேறுறொரு காட்டுப் பக்கமாக, தன் உறவு முறையானோரின் நிர்பந்தத்தால் சென்றிருந்தான். அங்கும் கலகம் உண் டானதினாலே, தன் தகப்பனை அழைத்தான். அவர் மறுபடியும் வந்து அவனை மீட்டுக் கொண்டார். இப்படியாக மாதத்திற்கு மாதம், அவ்வப் போது, அந்த வாலிபனானவன் பிரச்சனைகளில் சிக்கிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த சம்பவத்திலே, யாரை யாரை பரீட்சை பார்கின்றார்கள்? தகப்பனானவன் தன் மக னானவனை சோதி த்தறிகின்றாரா? இல்லை, மகனானவனே, தன் தகப் பனாவரின் பாது காப்பை பரீட்சை பார்க்கின்றவனாக வாழ்ந்து வந்தான். அன்று வனாந்தி ரத்தின் வழியாக கடந்து சென்று கொண்டிருந்த தேவ ஜனங்கள், தங்கள் தேவனாகிய கர்த்தரை பத்துமுறை பரீட்சித்துப் பார்த்தார்கள். அவர்கள் வணங்கா கழுத்துள்ளவர்களும், கீழ்படியாதவர்களுமாக இருந்ததால், அப்படி தேவனை சோதித்துப் பார்த்தார்கள். இன்றும் சில விசுவாசிகள் தேவ கிருபையை அற்பமாக எண்ணி, மேலே கூறப்பட்ட சந்தர்ப்பத்திலே உள்ள அந்த மகனானவனை போல, தங்கள் பரம தந்தையை பரீட்சை பார்கின்றார்கள். நீங்களோ, அப்படியாக பரம தந் தையை பரீட்சை பார்த்து உங்கள் மனதை உணர்வற்று போகப் விடாமல், தேவனாகிய கர்த்தரை நம்பி, அவருடைய வழியிலே நடவுங்கள். அவருடைய வார்த்தையிலே உறுதியாய் நிலைத்திருங்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கையில் நன்மையும் கிருபையும் உங்களைப் பின் தொடரும்.

**உபாகமம் 6:16**

**உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பீர்களாக.**

**ஜெபம்:** அன்பின் பரம தந்தையே, நான் ஒருபோதும் உம்மை பரீட்சை பார்க்காமல், உம்மை நம்பி உம்முடைய வார்த்தையின் வழியிலே நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நாம் பாக்கியம் பெற்ற பிள்ளைகள்

நாளாந்தம் கடுமையாக உழைத்து தன் குடும்பத்தை விசாரித்து வந்த தகப்பனானவர், படாசாலைக்கு செல்ல தன் மகனானவனுக்கு புதிய காலணிகளை தேவை என்பதை அறிந்து கொண்டார். கடையிலே இரு க்கும் அதி சிறந்த காலணிகளை வாங்கிக் கொடுப்பதற்கு அவரு க்கு அதிகநிர்வாகம் இல்லாதிருந்த போதும், தன்னிடமிருந்த நிர்வாகத்தின் அளவிற்குள் எவ்வளவு சிறந்த கால ணிகளை வாங்க முடியோ, அதை வாங்கி கொண்டு வந்து, தன்னுடைய மகனானவனுக்கு கொடுத்தான். கால ணிகளை பார்த்த மகனானவன், பரவ சம் அடைந்தான். அதைக் கண்ட தகப் பனானவருடைய உள்ளம் மகி ழ்சியால் பொங்கிற்று. ஆம் பிரிய மான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்திலே நமக்கு இருக்கும் பெற் றோர் பெலவீனமும் குறைவுமுள்ள வர்களாக இருக்கின்ற போதிலும், தங்களுடைய பிள்ளைகளுக்கு தங் களால் முடிந்த அளவிற்கு திறமான வைகளை கொடுக்கின்றார்கள் அல்லவா? “உங்களில் எந்த மனுஷ னானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல் லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பை க்கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டி க்கொள்ளு கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆம், பிரியமானவர்களே, தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாரா மல் நம்மெல்லாருக்காகவும் இயேசுவை ஒப்புக்கொடுத்தவர், அவரோ டேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32). நம்முடைய பரம பிதா நம்மேல் பாராட்டுகின்ற அன்பு எவ்வ ளவு பெரியதென்று பாருங்கள். அவர் நம்முடைய பட்சத்திலிருப்பதால் நாம் ஏன் அழுத்தும் சுமைகளையும் பாரங்களையும் குறித்து பயப்பட வேண்டும்? நம்முடைய பரம பிதா நமக்கு தீங்கு ஏதும் செய்ய மாட்டார் என்று அறிக்கை பண்ணுவதில் மாத்திரமல்ல, நெருக்கங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, தளர்ந்து போகாமல், அவிசுவாசத்திற்குரியவ ார்த்தைகளை பேசாமல், நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்திருங்கள்.

**ரோமர் 8:39**

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்றுநிச்சயித்திருக்கிறேன்.

**ஜெபம்:** வாக்குத்தத்தம்பண்ணின உண்மையுள்ள பரம தந்தையே, என்னுடைய நம்பிக்கையை நான் அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கும்படி எனக்கு பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.